# போலீஸ் பார்வை

POLICE PARVAI

மாத இதழ்

நல்ல விதைப்பு நலம் காக்கும் மாகும்

• மலர்-11 • Volume-11 • இதழ்-6 • Issue-6 • ஏப்ரல்-2026 • April -2026 • விலை ரூ.15/- • Rs.15/-

POLICE PARVAI NEWS WEB TV E_Book: www.policeparvai.com




சாத்தான் குளம் வழக்கில் 9 பேருக்கும்

## மரண தண்டனை

அத்தனை அழுத்தங்களை மீறி சாட்சியம் அளித்தவர்

தலைமை காவலர்

## ரேவதி



கத்திரி வெயில் ஜாக்கிரதை..!

FAKE

## திருப்பூரில் போலி நிருபர்கள்

கண்டு கொள்ளுமா காவல் துறை?



## யாருக்கும் பணம் அனுப்பாதீர்கள்:

IG திரு.பாலகிருஷ்ணன் IPS



## மாணவி கொலை வழக்கில் நடந்தது என்ன?

SP மதன் IPS விளக்கம்

தந்தையின் இனிஷியலை போல தாய் இனிஷியலையும் பயன்படுத்தலாம்

ஒற்றை பெற்றோருக்கு நீதிமன்றம் அனுமதி



கும்பகோணம் கோயில்களை அறிவோம்...


www.policeparvainews.com
இணைய தளத்தில் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்...


அதிர்ஷ்டமும் லாபமும் சேர உள்ள 5 ராசிகள்




## உடலில் ஏற்படக்கூடிய அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வளிக்கும் வேதிப்பொருட்கள் இல்லாத 100 சதவீத இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட துணை உணவுகள்.

EMPIRE
together to grow!

இந்த பரபரப்பான நவீன உலகத்தில் கெமிக்கல் நிறைந்த உணவுகள், சத்து இல்லா உணவுகள், மரபணு மாற்றம் செய்யப்பட்ட விவசாயத்தால் விளைந்த பொருட்கள் முதலியவற்றால் மனிதனுக்கு ஊட்டச்சத்து குறைபாடு இருப்பதும் அதற்காக துணை உணவுகளை நாம் அன்றாடம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் உலகம் அறிந்த உண்மை. ஆகவே நாங்கள் அதுபோன்ற நல்ல, மக்களுக்கு தேவையான எளிதில் கிடைக்காத இயற்கை பொருட்களை அறிமுகப்படுத்த களம் இறங்கியுள்ளோம்,

மூலிகை மற்றும் வேதிப்பொருட்கள் இல்லா துணை உணவுப்பொருட்கள் (HERBAL FOOD SUPPLEMENTARY & HEALTH CARE PRODUCTS). வேதிப்பொருட்கள் இல்லா கலப்படமற்ற உணவுப் பொருட்கள் (FOOD PRODUCTS), வீரியமான வேதிப்பொருட்கள் பயன்படுத்தபடாத மூலிகை அதி கம் அல்லது முழுவதும் சேர்க்கப்பட்ட சொந்த பயன்பாட்டு பெருட்கள் (PERSONAL CARE), அழகுசாதன (BEAUTY CARE) பொருட்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் (HOME CARE), சுற்றுசுழலை பாதிக்காத (ECO FRIENDLY) கைவினை பொருட்கள் (HAND CRAFT) போன்ற மனிதனுக்கும் மண்ணுக்கும் தீங்கு விளைவிக்காத பொருட்களை மட்டுமே எம்பயர் மார்க்கெட்டிங் செய்கிறது என்பதனை உறுதியுடனும் பெருமிதத்துடனும் தெரிவித்துகொள்கிறேன்.

Nr. **B.BHARATHIRAJ** MCA.,
Managing Director, EMPIRE



## உங்கள் இல்லத்திலிருந்தே எங்களது தயாரிப்புகளை பெறலாம்.

**97 89 49 1438 | 766 755 1542**

# போலீஸ் பார்வை

ஏப்ரல் 2026 மலர் 11 இதழ் 6



**அச்சிட்டு வெளியிடுபவர் :** ஆசிரியர் **Dr.N.பாலகிருஷ்ணன்**

**ஆன்மீக ஆலோசகர் :** Dr.M.பாலகிருஷ்ணன் சுவாமி

**கௌரவ ஆசிரியர் :** நினைவில்... புலவர் தியாக சாந்தன்

**முதன்மை ஆசிரியர்கள் :** S.முருகானந்தம், K.ராம்சுரேஷ், K.T.சிவக்குமார் B.A.,B.L., மரு.கண்ணன்

**துணை ஆசிரியர்கள் :** N.இளங்கோவன், G.ஹரிகிருஷ்ணன், N.ஜீவானந்தம், B.சம்பத், G.ஸ்ரீனிவாசன், R.வெங்கடேஷ், V.பிரபு, S.சுந்தர்

**இணை ஆசிரியர்கள் :** K.ரவிச்சந்திரன், U.மதனகோபால், K.மனோஹரன், K.K.ஞானேஸ்வரன்

International Legal advisor : **Ramachandran Saravanan B.A.,LLB., D.L.L..,LLM**

**சட்ட ஆலோசகர்கள் :** S.கோபாலமணிகண்டன் B.A., B.L., ML., மதுரை ஐகோர்ட், P.V.பிரகாஷ் B.A., B.L., V.சிவக்குமார் M.A., B.L. சென்னை ஐகோர்ட், Dr.V.S.முகம்மது சலீம் M.A., L.L.B., S.அண்ணாதுரை M.A., B.L., P.பார்த்திபன் M.Com., B.L., M.சபிதா BBA., B.L., S.ரவிச்சந்திரன் M.A., B.L, K.அருணாச்சலம் B.Com., LLB

**சிறப்பு ஆலோசகர் :** S.செயத்அலி B.Sc., LLB.,

**தலைமை நிருபர்கள் :** S.வேல்முருகன், I.சகாயராஜ், P.பிரஸ்டன், K.பாபு I.கண்ணன், N.ஹரிதாஸ், மணிகண்டன் முருகதாஸ், N.ராக்கேஷ் சுப்பிரமணியன், K.கோவர்த்தனகிரி, S.ரமேஷ், A.மாரிராஜா, P.ஜெகதீஷ், M.பாண்டியராஜன், J.ஜெயவேல்முருகன், N.முரளிதரன்

**சிறப்பு நிருபர்கள் :** V.Vivek Bomb, P.முத்துகுமரன், B.பாஸ்கரன், R.சக்திவேல், K.ரவிகிருஷ்ணன், Dr.A.S.முகமது ஹுசேன், M.சசி, P.கௌரிஷங்கர், G.அழகுராஜ், S.மணிகண்டன், J.பீமராஜ், LNK.சந்தன், B.குணசேகரன், R.பழனிச்சாமி, R.மணிமாறன், M.வெங்கடேசலு, குரு.சரவணன், P.மணிமாறன், A.R.முருகேசன்

**நிருபர்கள் குழு :** G.பாபு, K.ராஜசேகர், S.ராமச்சந்திரன், B.சிவக்குமார், B.சத்தியராஜ், R.சக்திவேல், R.குப்புசாமி, N.ராமசாமி, A.பெனியல்தேவபிரபு, S.சந்திரசேகரன், M.ரகு, N.சீனிவாசன், S.சிவக்குமார், S.ஜெயச்சந்திரன், R.வசந்த், R.விஷ்ணுமோான், D.ஹரிஹரன், V.ஸ்ரீனிவாசராவ், E.பால்ராஜ், C.பாண்டியன், S.பாலமுருகன், K.இந்திரகுமார், A.ஜெயச்சந்திரன், G.சிவப்பிரகாசம், Dr.D.வெங்கடேஷ்வரா, H.நீலகண்டன், J.செல்வம், S.சிந்தாமணி விநாயகர், K.ரகு, U.தியாகராஜன், S.சரவணன், S.சிவராஜ், குஷால் K ஷர்மா, G.சதீஷ்குமார், Dr.S.ஹரிநாராயணன், K.A.சுரேஷ் கிருஷ்ணா, D.திவாகர், T.ஜெயபிரகாஷ், M.மணிவண்ணன், G.ராமமூர்த்தி, S.ஸ்ரீனிவாசன், M.சேகர், V.K.கண்ணன், P.அண்ணாமலை, N.மோஹனா, A.பாலமுருகன், V.சதிஷ், C.விஜயகுமார், D.லெட்சுமணன், R.தியாகராஜன், H.சுஜித்குமார், S.ஆனந்த், R.ராமநாதன், P.கருப்புசாமிபாண்டியன், U.செல்வகுமார், M.ஆனந்தகுமார், K.தங்கராஜ், T.ஆனந்த்குமார், M.முத்துசாமி, C.சிவகுருநாதன், AK.ஷாஜதா, R.கோவிந்தசாமி, P.அசோக்குமார், S.விக்னேஷ், S.நவீன், M.ராஜகோபால், T.ஆலன்பே, B.சையத் முகமது மீரான், B.ரமேஷ்குமார், P.மஹேந்தர் புரோகித், R.கண்ணன், S.மணி, K.பாண்டியன், A.தண்டபாணி, G.சஜிக்குமார், C.இளங்கோ, V.முருகேசன், S.ஹரிஹரன் (எ) அய்யப்பன், SR.சுந்தரவேலு, L.பிரகாஷ், L.கலைவாணன், V.சண்முகராஜ், M.கவுசர், S.தியாகராஜன், R.சுமதி, A.குமரன், P.சதீஷ், R.ராஜேஷ், K.மாமுண்டிராஜன், M.மாதேஸ்வரன், S.லிங்கதுரை, R.ஸ்ரீதர், R.ராமலெக்ஷ்மி, R.ராகவேந்திரன், G.சதீஷ்குமார், P.தணிகைவேல், P.நடராஜ், G.நந்தகுமார், S.ஆனந்த்குமார், K.சுரேஷ்குமார், B.பிரேம்குமார், J.ஆண்டன் ஆன்ரூஸ் கிஷோர், G.V.ஜெகதீசன், M.சஞ்சய், V.லெட்சுமணன், P.ஆறுமுகம், A.அலெக்ஸ், B.ஸ்ரீனிவாசன், V.கஜபதி, B.வெங்கடாசலம், P.தேவராஜ், SP.முகேஷ், ஷானவாஸ் அஹமத், A.அப்துல்காதர், முத்து ஜெயசேகர், M.முருகேசன், G.மணிகண்ட பிரபு, A.லியோ கிளமண்ட், S.அன்வர்தீன், L.லூயில்பெர்ணான்டஸ், P.ராஜராமகிருஷ்ணன், R.தங்கபாண்டியன், R.கோபாலகிருஷ்ணன், V.ஆறுமுகச்சாமி, M.ஆறுமுகம், M.ரவி, S.சக்திவேல், K.கோபி, K.மாரிமுத்து, P.மணிகண்டன், S.கஜேந்திரவேல், E.கார்த்திக், SP.விமலேஸ்வரன், S.ரவிச்சந்திரன், N.நபிமுகமது, குரு.சரவணன், V.கணேசன், R.வெங்கடேசன், V.ராதாகிருஷ்ணன், A.தாமஸ் அந்தோணி, B,மாரிமுத்து, I.வேளாங்கண்ணி, N.ராஜ், S.ஜானகி, A.மகேந்திரன், S.விக்னேஷ், K.தர்மராஜ்(எ)பாலாஜி, K.S.அசோகன், C.பரமசிவம், R.செந்தில்குமார், A.சரவணன், S.பாலாஜி, S.நவநீத கிருஷ்ணன், K.செல்வ நயினார், K.விமல்ராஜ், R.ஜோதிபாசு, K.சதீஷ்குமார், R.நந்தகுமார், J.மணிகண்டன், S.வெங்கடேஷ், V.சுகுமாரன், K.பில்லர், R.சங்கர், Dr.J.காந்தியப்பன், S.ஜெயந்தி செல்வம், V.வேல்முருகன், S.தினேஷ்குமார், C.A.செந்தில்நாதன், S.பாஜி, G.முகமது அன்சாரி, முகமது தாவூத் ஹுசேன்



**அலுவலக முகவரி: 4B, GD.Floor, 4th Block Adilti Paradise, No.1, 2nd North Street, Poombuhar Nagar, Kolathur, Chennai-600 099. Cell: 9789491438, 7667551542 E.mail: editorpoliceparvai@gmail.com, Website.www.policeparvai.com**



All Rights Reserved Legal Jurisdiction Chennai City Court Only


● தலையங்கம்

# கத்தரி வெயிலில் காத்துக்கொள்ள

## வாழ்வியல் நடைமுறைகள்

கொளுத்தும் கத்தரி வெயிலின் தாக்கத்தால் பெரும் அவதிக்குள்ளாகி மக்கள் அல்லாடி வருகிறார்கள். எப்பொழுதும் நமது உடலின் தட்பவெப்ப நிலை சமநிலையில் இருந்தால்தான் நாம் சோர்வின்றி நோயின்றி புத்துணர்ச்சியுடன் வாழ முடியும். அதுவும் கோடை கத்திரி வெயிலின் வெப்பநிலை இந்தாண்டு எப்போதும் இல்லாத அளவுக்கு மிக அதிகமாக வெயிலின் தாக்கம் இருக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்கள் அதிக வெப்பத்தால் பாதிப்புக்கு உள்ளாகி உடல் சோர்வாகும் நிலை ஏற்படும். குறிப்பாக மதியம் 12 மணி முதல் 3 மணி வரை கொளுத்தும் வெயிலால் சராசரி நடைமுறை வாழ்க்கை மற்றும் போக்குவரத்து பாதிக்கப்படும் என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வாறு பாதிப்புக்குள்ளாகும் கத்தரி வெயிலின் வெப்ப தாக்குதலை சமாளித்து உடலை ஆரோக்கியமாக வைத்து கொள்ள, நாம் வாழ்வியலில் சிலவற்றை பின்பற்றுவது அவசியமாகிறது. நாம் நமது உடல் தட்பவெட்ப நிலை சீராக சமநிலையில் வைத்துக்கொள்ள நமது உடலில் நீர்ச்சத்து குறையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதிகப்படியான நீர்ச்சத்துள்ள காய், கனிகளை அன்றாடம் உணவுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும். அதிகமாக எண்ணெய், காரம், புளி கலந்த திட உணவு வகைகளையும் சிக்கன், மட்டன், பர்கர், பீசா, போன்ற மாமிச உணவுகளையும் வேதிப்பொருள் கலவையால் தயாரான குளிரூட்டப்பட்ட குளிர்பானங்களையும் தவிர்த்து, எளிதில் ஜீரணிக்க கூடிய காய்கறி, சிறுதானியங்கள், இளநீர், எலுமிச்சை சாறு, வீட்டில் தயார் செய்த பழச்சாறு, மோர், தயிர், வெள்ளரிப் பிஞ்சு, தர்பூசணி, கிர்ணி பழம் ஆகிய நீர்ச்சத்தும் எதிர்ப்பு சக்தியும் உள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். மேலும் வெளியேச் சென்று பார்க்க வேண்டிய வேலைகளை காலை 11 மணிக்குள்ளும் மாலை 4 மணிக்கு பிறகும் பார்த்து நம்மை பாதுகாத்துக் கொள்வது அவசியம். பொதுவாக நம் உடலும் மனமும் ஏற்றுக் கொள்ளாத உணவு மற்றும் பழக்க வழக்கங்களை சீரமைத்து நம் உடல் ஏற்றுக்கொள்ள கூடிய உணவு வகைகளையும் நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்த காய், கனி, கீரை வகைகளையும் உணவில் தினமும் சேர்த்து உட்கொள்வதால் இந்த வெப்பத்தின் தாக்கத்தை எதிர்கொள்ளும் உடல் சக்தியை பெற்று நோயின்றி உடல் சோர்வின்றி மன ஆரோக்கியத்துடனும் உடல் ஆரோக்கியத்துடனும் வாழ வழிவகை செய்யும். நம் உணவியல் முறையும் வாழ்வியல் முறையும் எந்த காலநிலைகளையும் எதிர்கொள்ளும் வகையில் சீராக அமைத்துக் கொள்வது மிக அவசியமானது. நாம் அதை உணர்ந்து மன ஆரோக்கியத்துடனும் உடல் ஆரோக்கியத்துடனும் நோயின்றி வளமுடன் வாழ்வோம்.

**ஆசிரியர்**

### இதழ் நிர்வாகத்தின் முக்கிய அறிவுறுத்தல்...

'போலீஸ் பார்வை' மாத இதழில் இணைந்துள்ள நிருபர்கள், மற்ற பொறுப்பு வகிப்பவர்கள் என, எவரும் எந்த உள்நோக்கத்துடனும் சுய லாபத்திற்காக தவறாக செயல்பட நிர்வாகம் அனுமதிக்காது. மேலும், மீறி செயல்படுபவர்கள் பொறுப்பிலிருந்து நீக்கப்படுவார்கள்.

# தஞ்சை மண்ணிற்குப் பெருமை சேர்த்த காவல் ஆய்வாளர் திரு.கே.சிவக்குமார்



தஞ்சாவூர் மாவட்டம் துலுக்கம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த காவல் ஆய்வாளர் திரு.கே.சிவக்குமார் அவர்கள், குருகிராமில் நடைபெற்ற அகில இந்திய அளவிலான காவல் துறை துப்பாக்கி சுடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத் துள்ளார். விஜபி பாதுகாப்பிற்குப் பயன்படும் MP–5 துப்பாக்கி சுடுதல் பிரிவில் முதலிடம் பிடித்து தமிழக காவல் துறைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரது இந்த மகத்தான வெற்றியைப் பாராட்டி மத்திய காவல் துறை தலைவர் திரு.ஜி.பி.சிங் அவர்களும் பொதுமக்களும் பாராட்டி வருகின்றனர்.

நமது மண்ணின் மைந்தருக்கு மனமார்ந்த வாழ்த்துகள்..!

நிருபர்: S.விக்னேஷ், தஞ்சை.

இரு சக்கர வாகன விபத்தில் சிக்கி

## மூளைச்சாவு ஏற்பட்டவரின் உடல் உறுப்புகள் தானம்

குடும்பத்தினரை பாராட்டிய சமூக ஆர்வலர்கள்



செங்கல்பட்டு மாவட்டம் வள்ளிபுரம் பி.வி.களத்தூரில் வசித்து வந்த ஏழுமலை (எ) குட்டி என்பவர் இருசக்கர வாகனத்தில் செல்லும் போது, ஏற்பட்ட விபத்தால் பாதிக்கப்பட்டு, செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இவருக்கு மூளைச்சாவு ஏற்பட்டுள்ளதாக மருத்துவர்கள் அறிவுறுத்தியதன் பேரில், அவரது குடும்பத்தினர் எழுமலையின் உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வந்தனர். தான் இந்த பூவுலகை விட்டு மறைந்தாலும் தனது உடல் உறுப்புகளை தானம் செய்து பல உயிர்களை காப்பாற்றிய ஏழுமலை(எ) குட்டி மற்றும் அவரது குடும்பத்தினரின் தியாகத்தை எண்ணி மகிழ்வாக உள்ளது.

அண்ணாரின் ஆன்மா சாந்தியடைய என்றென்றும் பிரார்த்திப்போம் என மறைமலை நகரைச் சேர்ந்த சமூக ஆர்வலர் வெ.முருகன் தகவல் தெரிவித்துள்ளார்.

தலைமை நிருபர்: N.முரளீதரன், மறைமலைநகர்.



***நல்லவிதைப்புமனிதநலம்காக்கும்மரமாகும்..***

***விழுதுகள் மரத்தை தாங்கலாம், ஆனால் வேர் மட்டுமே மரத்தை வாழ வைக்கும்..***

***அதுபோல, உன் வலிமையான எண்ணங்களும், நற் செயல்களும் மட்டும் தான் உன்னை மனிதனாக்கும்..***

**ஆசிரியர் Dr.N.பாலகிருஷ்ணன்**

# பெருமாக்கநல்லூர் வீரர்களுக்கு **நினைவஞ்சலி**



1920 ஏப்ரல் 3. உசிலம்பட்டி அருகே பெருங்காமநல்லூர் கிராமத்திற்கு கை ரேகை வாங்க போலீஸ் பட்டாளம் வந்தது. கள்ளர் நாடே கிளர்ந்து எழுந்தது. நாட்டுப் பெரியவர்கள் ஒன்று திரண்டனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது. பக்கத்து ஊர்காரர்களுக்கு தகவல் சொல்லப்பட்டது.

காளப்பன்பட்டி, குமரம்பட்டி, போத்தம்பட்டி ஊர்களிலும் ஜனங்கள் தயாராகினர். பெருங்காமநல்லூர் மக்களுக்கு ஆபத்தான நிலை ஏற்படுமானால் "படாங்கு" வேட்டுச் சத்தம் வெடிக்கப்படும். வேட்டுச் சத்தம் கேட்டவுடன் பக்கத்து ஊர்காரர்கள் விரைந்து வந்து உதவ ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நாயக்கமார்கள், ரெட்டியார்கள், பிள்ளைமார்கள், முதலியார்கள் போன்ற இதர சமூகத்தினரும் ஆதரவாக இருந்தனர்.

வீரன் விட்டி பெருமாள் தேவர் சிலம்பக் கலைஞர்களை ஒன்று திரட்டினார். இளைஞர்கள் ஆர்ப்பரித்தெழுந்தனர். பெருங்காமநல்லூர் ஒரு யுத்தத்திற்கு தயாரானது. அதிகாரிகள் ஊர் மந்தையில் குவிந்தனர். ஆண் பெண் அனைவரும் மந்தையை நோக்கித் திரண்டனர். மந்தயைில் உள்ள மரத்தில் அதிகாரிககளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக மரம் முழுவதும் வெற்றிலை மென்று எச்சிலை துப்பி சிவப்பாக்கி வைத்திருந்தனர்.

ஒரே கூட்டம். கூச்சல், கோபாவேசத்தோடு ஜனக்கூட்டம். ஆயுதப்படை கிராமத்தை சுற்றி முற்றுகை போட்டது. கட்டுக்கடங்காத கூட்டம். செம்புழுதி பறக்க நாலாபக்கமும் ஓடவும் ஆடவும் சீட்டி அடிக்கவும் சிலம்பம் சுற்றவுமாக இளைஞர்கள். மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டே போனது.

ரேகை சட்டத்திற்கு மக்களை அடிபணியவைக்கும் விதமாக பெரியவர்களிடம் தொடர்ந்து விவாதம் நடக்கிறது. ஒரு கட்டத்தில் ஆயுதத்தை உயர்த்தி ரேகை பெற முயற்சிக்கின்றனர்.

"அடாத காரியம் செய்து மக்களை அடிமைப்படுத்த வந்த பயல்களே, ஊரை விட்டுப் போங்கடா; இல்லையேல் உங்களை வெட்டி காத்தண்டம்மனுக்கு பலி கொடுத்து விடுவோம்" என்று முழங்குகிறார் விட்டி பெருமாள் தேவர்.

ரேகையைப் பதிவதற்கு காவலர்கள் சிலரை பிடித்தனர். மக்கள் காவலர்கள் மீது பாய்ந்து ஆட்களை மீட்க முனைந்தனர். உசிலம்பட்டி டெபுடி தாசில்தார் ஜான் அன்பு நாடார் சுடுவதற்கு ஆணையிட்டார். சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ராஜீ பிள்ளையும் சப்–இன்ஸ்பெக்டர் சீனிவாச நாயுடுவும், ஏட்டு காளிமுத்து சேர்வையும் மற்றும் போலிஸ் பட்டாளமும் சரமாரியாகச் சுட்டது.

அதற்கு முன் வரை துப்பாக்கியை பற்றி அவர்கள் அறிந்திருக்கவில்லை. வெடி சத்தம் மட்டும் கேட்கிறது. வரிசையாக விழுகின்றனர். விழுந்தவர்களுக்கு மாயக்காள் தண்ணீர் கொடுக்கிறார். அவர் மீது குண்டு பாய்கிறது.

வேலூரின் சிப்பாய் கலகத்திற்கு பிறகு 120 ஆண்டுகளுக்கு பின் ஆங்கிலேய அரசை ஆயுதங்களுடன் எதிர்த்து வீரமரணமடைந்த பெருங்காமநல்லூர் வீரத்தியாகிகளுக்கு முக்குலத்தோர் எழுச்சி கழகத்தின் வீரவணக்கம்..!




ஏப்ரல் மாதம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அதவது சனி பெயர்ச்சி மீனத்தில் நடந்துள்ளதோடு, இந்த மாதத்தில் செவ்வாய், புதன், சுக்கிரன், சூரியன் ஆகிய கிரகங்களின் பெயர்ச்சிகள் நடக்க உள்ளன. அதோடு சூரியன் மேஷ ராசியில் பெயர்ச்சி ஆகக்கூடிய நிலையில் சித்திரை மாதமும், தமிழ் புத்தாண்டும் தொடங்க உள்ளது. இதன் காரணமாக ஏப்ரல் மாதத்தில் செல்வம், பதவி உயர்வு என பல விதத்தில் அதிர்ஷ்ட பலன்கள் கிடைக்கும்.

ஏப்ரல் மாதத்தில் ரிஷப ராசிக்காரர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். இந்த மாதத்தில் ராசி நாதன் சுக்கிரன் மீன ராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். இதனால் உங்களுக்கு வருமான உயர்வைப் பெறுவதற்கான நல்ல வாய்ப்புகளைத் தர வாய்ப்புள்ளது. உங்கள் வேலைகளை செய்து முடிக்க கடின உழைப்பு தேவைப்படும். அந்த முயற்சிக்கான பலனை நிச்சயமாக பெறுவீர்கள். சம்பாதிப்பதற்கான பல வாய்ப்புகள் கிடைக்கும்.

ஏப்ரல் மாதத்தில் கடக ராசிக்கு அதிர்ஷ்டம் நிறைந்ததாக இருக்கும். மாத தொடக்கத்தில் உத்தியோகஸ்தர்களுக்கு மிகவும் சிறப்பான பலன்கள் கிடைக்கும். வணிக வர்க்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு நல்ல லாபம் பெறலாம். உங்கள் செலவுகள் வருமானத்தை விட அதிகமாக இருக்கும். செல்வாக்குமிக்க நபர்கள், நண்பர்களின் ஆதரவால் எதிர்பார்த்த விஷயங்களைச் செய்து முடிக்க முடியும். எதிர்கால திட்டங்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். இது எதிர்காலத்தில் எதிர்பார்த்த வகையில் நிறைய நன்மைகளைத் தரும். தேர்வு, விளையாடு போட்டிகளுக்குத் தயாராகக்கூடிய மாணவர்களுக்கு வெற்றி கிடைக்கும். காதல் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

துலாம் ராசியை சேர்ந்தவர்களுக்கு, ராசி நாதன் சுக்கிரன் 6ம் வீடான நோய், எதிரி ஸ்தானத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கிறார். இந்த மாதத்தில் உங்கள் வாழ்க்கையில் வெற்றியும், முன்னேற்றமும், நிதி ஆதாயங்களும் அதிகம் கிடைக்கக்கூடியதாக இருக்கும். உங்கள் குடும்ப பிரச்சினைகளிலிருந்து விடுபடவும், நிவாரணம் பெறவும் முடியும். வேலை செய்பவர்களுக்கு பதி உயர்வு, சம்பள உயர்வு எதிர்பார்க்கலாம். இந்த மாதத்தில் குடும்பத்தில் மகிழ்ச்சி, செழிப்பு அதிகரிக்கும்.

மகர ராசியை சேர்ந்தவர்களுக்கு இந்த மாதம் சனி தாக்கத்திலிருந்து விடுபட உள்ளார்கள். ஏழரை சனில் இருந்து விடுபடக்கூடிய உங்களுக்கு மரியாதை அதிகரிக்கும். பல விதத்தில் பண ஆதாயங்கள், முன்னேற்றத்திற்கான பல நல்ல வாய்ப்புகளும் கிடைக்கும். இந்த மாதம் உங்களுக்கு பல சாதகமான பலன்கள் தரும். நீண்ட காலமாக காத்திருந்த அனைத்தையும் பெறுவீர்கள்.

மீன ராசியை சேர்ந்தவர்களுக்கு இந்த மாதம் ஏழரை சனி தொடங்குகிறது. இருப்பினும் இந்த மாதத்தில் நடக்கக்கூடிய சில கிரக சூழ்நிலை காரணமாக சில நல்ல மாற்றங்கள் ஏற்படும். குடும்பத்தில் சூழ்நிலை சாதகமாக இருக்கும். குறிப்பாக இந்த மாதத்தில் சுக்கிரன் மீன ராசியில் உச்சம் அடைகிறார். சூரியனும் புதனும் சேர்ந்து புதாதித்ய ராஜயோகத்தை உருவாக்குகின்றனர். இது போன்ற சூழலில் மீன ராசிக்கு தொழில், குடும்பம் மற்றும் ஆரோக்கியத்திற்கு ஆதரவுமான சூழல் இருக்கும். உத்தியோகஸ்தர்களுக்குக் கடின உழைப்பிற்கு ஏற்ற மரியாதை கிடைக்கும். முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் கிடைக்கும்.

**மேஷ ராசி அன்பர்களே!**




பங்குனி மாத தொடக்கம் பல நன்மைகளை கொண்டு வரப் போகிறது. குடும்பத்தில் சிக்கல் சிரமங்கள் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். எந்த பிரச்சினையாக இருந்தாலும் மனம் விட்டுப் பேசுங்கள். குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலையே நிலவும். உறவினர்கள் உங்களுக்கு ஒத்தாசையாக இருப்பார்கள். பல முக்கியமான கட்டத்தில் உங்கள் தேவையை பூர்த்தி செய்வதற்கு அவர்கள் முன்வருவார்கள்.

ஏதாவது ஒரு வகையில் வருமானம் பெருகும். கையில் காசு பணம் புரளும். தங்கம் விலை ஏறினாலும் கையில் இருக்கும் காசுக்கு தகுந்த மாதிரி ஆபரணங்கள் வாங்குவீர்கள். வீட்டிற்கு தேவையான பொருள்களையும் அவசியம் கருதி வாங்கி போடுவீர்கள். அலுவலகத்தில் உங்களுடைய பொறுப்பு கூடும். எந்த சூழ்நிலையிலும் அலட்சியமாக வேலை பார்க்காதீர்கள். அதிகாரிகள் ஒத்தாசையாக இருப்பார்கள் என்று நம்ப வேண்டாம். அரசு பணியில் இருப்பவர்களுக்கு மாத பிற்பகுதியில் சிரமங்கள் ஏற்படலாம். எச்சரிக்கையாக இருப்பது நல்லது. இருப்பினும் கொடுக்கல் வாங்கல் பிரச்சனைகளில் கவனமாக இருப்பது நல்லது. வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வெற்றி கரமான மாதம். அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு தானாக வரும். இடமாறுதலும் சலுகையும் ஏற்படலாம்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர்

ஸ்லோகம்: ‘கந்தசஷ்டிக் கவசம்’

பரிகாரம்:முருகப்பெருமானுக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: பங்குனி 22 (5/4/26) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.14 மணி முதல் 25 (8/4/26) புதன்கிழமை அதிகாலை 4.55 மணி வரை.

**ரிஷப ராசி அன்பர்களே!**




நினைத்த காரியங்கள் எல்லாம் தடையில்லாமல் நடக்கின்ற மாதமாக இது அமையும். உறவினர்கள் உங்களின் வாழ்க்கை முறையைப் பார்த்து பொறாமைப்படுகின்ற அளவிற்கு கணவன் மனைவியிடையே அன்பும் அனுசரணையும் இருக்கும். இருப்பினும் மற்றவர்கள் பேச்சை கேட்பது சிக்கலை கொண்டு வரலாம். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். உறவினர்கள் வீட்டு விசேஷங்களில் உற்சாகமாக கலந்து கொள்வீர்கள். வீட்டில் நிம்மதி நிலவும்.

செலவுகள் அதிகரித்தாலும் அதற்கு ஏற்ற மாதிரி வரவுகளும் அமையும். வேலை நிமித்தமாக சிலர் வெளிநாடு செல்ல வேண்டிய தேவை உருவாகும். பிள்ளைகளின் மேல்படிப்பிற்காக சில ஏற்பாடுகளை செய்வீர்கள். மருத்துவத்துறையில் மாணவர்கள் சாதனை படைக்கின்ற நிலை உண்டாகும். அலுவலகத்தில் உடனுக்குடன் வேலைகளை முடித்து மேலதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள். தொழிலில் மேன்மை உண்டாகும். சில சிக்கல்கள் தொழிலுக்கு இருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு வருவீர்கள். வங்கி வரவு செலவு கணக்குகளை மிகச் சரியாக கையாளுவது நல்லது. பெண்களுக்கு ஏற்ற இறக்கமான பலன்களைத் தரும். வேலைக் குச் செல்லும் பெண்கள் மன அழுத்தத்தால் பாதிக்கப்படு வார்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைக ளுக்கான வாய்ப்புகள் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர்

ஸ்லோகம்: 'விநாயகர் அகவல்'

பரிகாரம்: விநாயகருக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: பங்குனி 25 (8/4/26) புதன் காலை 4.56 மணி முதல் 27 (10/4/26) வெள்ளி மாலை 3.58 மணி வரை.

**மிதுன ராசி அன்பர்களே!**




எங்கும் வெற்றி எதிலும் வெற்றி என்று பங்குனி மாதம் பல நல்ல வாய்ப்புகளை உங்களுக்கு பரிசளிக்க போகிறது. இருந்தாலும் வீட்டில் பொறுமை காக்க வேண்டியது உங்கள் பொறுப்பு. கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் மிகவும் அவசியம். குடும்பத்தின் மகிழ்ச்சிக்காக நீங்கள் சில தியாகங்களை செய்ய வேண்டிய நிலை ஏற்படும். கையில் காசு பணம் தாராளமாக புரளும் என்றாலும் சில அவசியமான செலவுகள் வந்து உங்களை சிரமப்படுத்தும். வீட்டு தேவைக்காக சில பொருட்களை வாங்க வேண்டி வரும். அதனால் கையிருப்பு கரைந்து போகும். உறவினர்கள் வகையில் உங்களுக்கு செலவு உண்டாகும். யாத்திரை களுக்கும் செல்ல வேண்டிய நிலை உண்டாகும். குடும் பத்துடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள். பிள்ளை களின் படிப்புக்காக முக்கிய நபர்களின் ஆதரவை நாடுவீர்கள். உழைக்க தயங்க மாட்டீர்கள். அதேநேரத் தில் வேலைச்சுமை உங்களை பாதிக்காத நிலையில் இருக்கும். அது உங்களுக்கு சிக்கல். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு உயர்வு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன்

ஸ்லோகம் : ஓம் அம்மையே, அம்பிகையே போற்றி'

பரிகாரம்: துர்க்கைக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: பங்குனி 27 (10/4/26) வெள்ளி மாலை 3.59 மணி முதல் 29 (12/4/26) ஞாயிறு இரவு 1.05 மணி வரை.

**கடக ராசி அன்பர்களே!**




மாத ஆரம்பத்தில் சில மங்கலகரமான செய்திகள் வந்து சேரும். பிரிந்து போன உறவுகளை ஒன்று சேர்ப்பீர்கள். எந்த காரியத்தையும் பொறுமையுடன் செயல்படுத்த வேண்டும். கணவன் மனைவி ஒற்றுமை மேலோங்கி நிற்கும். ஒருவரை ஒருவர் அனுசரித்து நடந்து வீட்டில் சந்தோஷ நிலையை கொண்டு வருவீர்கள். சுப நிகழ்ச்சிகளும் நடப்பதால் குடும்பத்துடன் உறவினர்கள் வீட்டில் நடைபெறும் விருந்து விழாக்களில் கலந்து கொள்வீர்கள். மனைவி பிள்ளைகள் உங்களின் கருத்துக்கு தகுந்தவாறு நடந்து கொள்வார்கள். வெளிநாட்டு பயணம் ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாகும். வெளிநாட்டில் வசிக்கும் குடும்பத்தினரின் சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்ள செல்வீர்கள். பிள்ளைகள் படிப்பில் மிகுந்த அக்கறையாக இருப்பார்கள். அதிகாரிகள் ஓரளவு ஒத்துழைப்பு தருவார்கள். அரசு பணியில் இருப்பவர்கள் மாத நடுப்பகுதியிலும் பிற்பகுதியிலும் மிகுந்த கவனத்துடன் வேலை பார்ப்பது நல்லது. வியாபாரம் சுமாராக நடக்கும். தொழில் துறையில் புதிய நிகழ்ச்சிகளை புகுத்துவீர்கள். கூட இருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சனைகளை புத்திசாலித்தனமாக களைவீர்கள். பெண்களுக்கு சில அதிரடியான மாற்றங்கள் ஏற்படும். ஊதிய உயர்வு, சலுகைகள் கிடைக்கலாம். ஆடை அணிமணி சேர்க்கைகள் உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான்

ஸ்லோகம்: நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க

பரிகாரம்: பைரவருக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: பங்குனி 29 (12/4/26) ஞாயிறு இரவு 1.06 மணி முதல் 2 (15/04/26) புதன் காலை 7.41 மணி வரை.




**சிம்ம ராசி அன்பர்களே!**

சிம்ம ராசிக்காரர்களுக்கு பல சிறப்பான பலன்களை மாத முற்பகுதியிலேயே பார்க்கலாம். கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வு அவசியம். அத்தியாவசிய பொருட்களை வாங்கி வீட்டை அழகு படுத்துவீர்கள். தங்க நகைகள் வாங்குவதற்கான சில ஏற்பாடுகளை செய்வீர்கள். உறவினர்கள் உங்களுக்கு சரியான காலத்தில் உதவி செய்வார்கள். வெளிநாட்டில் படிப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்வீர்கள். கோயில் திருப்பணிகளுக்கான வேலைகளில் ஈடுபடுத்திக் கொள்வீர்கள். அலுவலகம் சுகமான சுமைகளை தருகின்ற வகையில் அமையும். அதிகாரிகளும் உங்களுக்கு அனுசரணையாக இருப்பார்கள். அரசு பணியில் இருப்பவர்கள் முக்கிய முடிவுகளை கவனமாக எடுக்க வேண்டும். தொழிலில் புதிய முதலீடுகளை செய்வீர்கள். வியாபாரத்தில் இருந்த பிரச்சனைகளை சாமர்த்தியமாக தீர்ப்பீர்கள். போட்டியாளர்களை புற முதுகு காட்டி ஓட வைப்பீர்கள். எதிலும் வெற்றி பெற வேண்டும் என்று ஆர்வத்தோடு உழைப்பீர்கள். வரவு செலவு கணக்குகளில் தவறு நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பெண்களுக்கு சிறப்பான மாதமாக அமையும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மர்

ஸ்லோகம்: ஓம் ஸ்ரீ யோக நரசிம்மா போற்றி

பரிகாரம்: யோக நரசிம்மருக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: சித்திரை 2 (15/04/26) புதன் காலை 7.42 முதல் 4 (17/04/26) வெள்ளி பகல் 12.06 மணி வரை.




**கன்னி ராசி அன்பர்களே!**

பங்குனி மாதம் பல்வேறு சிறப்புகளை தந்து சமுதாயத்தில் அந்தஸ்தை உயர்த்துகின்ற மாதமாக அமையும். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஏதோ ஒரு வகையில் பண வரவு இருந்து கொண்டே இருக்கும். ஆடை ஆபரணங்கள் வாங்கும் ஆசையை இந்த நேரத்தில் நிறைவேற்றுவீர்கள். வீட்டை புதுப்பித்து புதிய மின்சார சாதனங்களை பொருத்துவீர்கள். வேலை நிமித்தமாக சிலருக்கு வெளிநாடு போகின்ற வாய்ப்பு ஏற்படும். குடும்பத்துடன் உறவினர்கள் இல்லங்களுக்கு சென்று வருவீர்கள். சிலர் சுற்றுலா செல்வதற்கான வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளின் வேலைக்காகவும் படிப்புக்காகவும் அரசாங்க பதவியில் இருப்பவர்களின் ஆதரவை நாட வேண்டிய நிலை ஏற்படும்.அலுவலகத்தில் கடுமையாக உழைக்க வேண்டிய கட்டாயம் உண்டாகும். கூட இருப்பவர்களே இடையூறு செய்யலாம். சிலருக்கு இடம் மாற்றமும் ஏற்படக்கூடும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருக்கும். இல்லறத்தை நல்லறமாக மாற்றும் பெண்களுக்கு இன்பம் தரும் மாதமாக பங்குனி பரிமளிக்கும். உயர்ந்த ஆடைகள் வாங்குவீர்கள். விரும்பிய தங்க நகைகள் வாங்கும் வாய்ப்பு உண்டாகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மகாலட்சுமி

ஸ்லோகம் :ஓம் அன்பு லக்ஷ்மியே போற்றி

பரிகாரம்: மகாலஷ்மிக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: சித்திரை 4 (17/04/26) வெள்ளி பகல் 12.07 முதல் 6 (19/04/26) ஞாயிறு மாலை 3.03 மணி வரை.




**துலா ராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் வீட்டில் சின்ன சின்ன பிரச்சனைகள் ஏற்படலாம். உறவினர்களால் மனச்சங்கடங்கள் உண்டாகலாம். கணவன் மனைவிக்கு இடையே சலசலப்புகள் உண்டாகலாம். கையில் காசு தாராளமாக புழங்கும். ஆடை ஆபரணங்கள் வாங்குவதற்கான வாய்ப்புகள் உண்டாகும். வீட்டிற்கு தேவையான பொருட்களும் வாங்குவீர்கள். அதற்காக கையிருப்பை செலவு செய்ய வேண்டிய கட்டாயம் வரும். உறவினர்களும் ஒத்தாசையுடன் நடந்து கொள்வார்கள். வீட்டில் உள்ளவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதில் முனைப்பு காட்டுவீர்கள். வெளிமாநிலங்களுக்கு சென்று வருகின்ற வாய்ப்பு ஏற்படும். குடும்பத்தினரோடு கோயில் தலங்களுக்கு சென்று வருவதற்கான ஏற்பாடுகளை செய்வீர்கள். பிள்ளைகளின் வேலைக்காகவும் படிப்புக்காகவும் முக்கிய நபரை சந்திப்பீர்கள். பணிச் சுமையால் கொஞ்சம் மனச்சுமை ஏற்படும். அதே நேரத்தில் உங்களுக்கு கொடுத்த வேலைகளை அலுவலகத்தில் சிறப்பாக செய்வீர்கள். மாத பிற்பகல் பகுதியில் சில சிக்கலான வேலைகளை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். வேலை பார்க்கும் பெண்களுக்கு சலுகைகளும் ஊதிய உயர்வும் கிடைக்கக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள்

ஸ்லோகம்: ஓம் ஹரி ஹரி போற்றி

பரிகாரம்: பெருமாளுக்கு நெய் தீபம்

சந்த்ராஷ்டமம்: சித்திரை 6 (19/4/26) ஞாயிறு மாலை 3.04 மணி முதல் 8 (21/04/26) செவ்வாய்கிழமை மாலை 5.23 மணி வரை.




**விருச்சிக ராசி அன்பர்களே!**

பங்குனி மாதம் உங்களுக்கு உற்சாகம் தரும் மாதமாக அமையப் போகிறது. குடும்பத்திலிருந்து வந்த கசப்புகள் மறைந்து போகும். கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் மனதை பகிர்ந்து கொள்வீர்கள். மேலும் சூழ்நிலைக்கு தகுந்தவாறு நடந்து கொள்ள தலைப்படுவீர்கள். இருப்பினும் மகிழ்ச்சியான சூழ்நிலையே குடும்பத்தில் காணப்படுகிறது. உறவினர்களின் வருகையும் ஒத்துழைப்பும் நல்ல காரியங்களுக்கு பயனுள்ளதாகவும் அமையும். வீட்டில் மகிழ்ச்சியும் திருப்தியும் உண்டாகி மன நிம்மதி ஏற்படும்.

எதிர்வரும் காலங்களில் வெயிலின் தாக்கத்தை உணர்ந்து வீட்டில் குளிர்சாதனத்தை பொருத்துவீர்கள். வியாபாரம் சம்பந்தமாக வெளியூர் பயணங்கள் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படும். வேலை அழுத்தம் காரணமாக மன அழுத்த அதிகரிக்கும். இருப்பினும் சரியான நேரத்தில் வேலைகளை முடித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அதிக கவனத்தை செலுத்த வேண்டும். போட்டியாளர்களால் சில சிக்கல் ஏற்படக்கூடிய வாய்ப்பு உள்ளது. வேலை பார்க்கும் பெண்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கலாம். பதவி உயர்வு உண்டாகலாம். குடும்பத்தை நிர்வாகம் செய்கின்ற பெண்கள் தங்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு வசதி வாய்ப்புடன் இருப்பார்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான்

ஸ்லோகம்: ஓம் முத்தமிழ் வடிவே முதல்வா போற்றி,

பரிகாரம்: முருகனுக்கு நெய் தீபம் ஏற்றுவது நல்லது.

சந்த்ராஷ்டமம்: சித்திரை 8 (21/4/26) செவ்வாய்கிழமை மாலை 5.24 மணி முதல் 10 (23/04/26) வியாழக்கிழமை இரவு 8.02 மணி வரை.




**தனுசு ராசி அன்பர்களே!**

அமர்க்களமான பலன்களை அள்ளித் தருகின்ற மாதமாக பங்குனி மாதம் உங்களுக்கு அமைகிறது. சுப நிகழ்ச்சிகளின் காரணமாக வெளியூர் பயணங்கள் அமையும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பண உதவி வந்து சேரும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளின் வேலைக்காக சில முன்னேற்பாடுகள் செய்வீர்கள். ஆபரணங்கள் வாங்குவதற்காக சில ஏற்பாடுகளையும் செய்வீர்கள். வீட்டில் உள்ளவர்களின் ஆசையை பூர்த்தி செய்ய பாடுபடுவீர்கள். சகோதர சகோதரிகளுக்கு தேவையான உதவிகளை செய்வீர்கள். அலுவலகத்தில் மேலதிகாரிகளின் அழுத்தம் அதிகரிக்கும். மாத நடுப் பகுதி, பிற்பகுதியில் அரசு ஊழியர்களுக்கு சவாலாக அமைகின்ற காலம். தொழில் வியாபாரம் எதிர்பார்த்ததை விட லாபத்தைக் கொடுக்கும். போட்டியாளர்கள் தோற்றுப் போவார்கள். தொழிலுக்கு புதிய முதலீடு செய்வீர்கள். அதே நேரத்தில் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வெற்றிகரமான மாதமாக இது இருக்கிறது. பதவி உயர்வு கிடைக்கலாம். சம்பள உயர்வையும் எதிர்பார்க்கலாம். குடும்பத்தை கட்டிக் காக்கும் பெண்கள் நினைத்த காரியத்தை நிறைவேற்றிக் கொள்வார்கள். வீட்டை மகிழ்ச்சிகரமாக வைத்திருப்பார்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: தக்ஷிணாமூர்த்தி
ஸ்லோகம் :ஓம் அறிவுக் குருவே போற்றி
பரிகாரம்: தக்ஷிணா மூர்த்திக்கு மஞ்சள் வஸ்த்திரம்
சந்த்ராஷ்டமம்: சித்திரை 10 (23/4/26) வியாழக்கிழமை இரவு 8.03 மணி முதல் 12 (25/04/26) சனிக்கிழமை இரவு 11.51 மணி வரை.




**மகர ராசி அன்பர்களே!**

மாதத் தொடக்கத்தில் குடும்பத்தில் உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம். கணவன் மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. இருப்பினும் குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலையே காணப்படும். சுப நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து நடப்பதால் உறவினர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருக்கெடுக்கும். சிலருக்கு வெளி மாநிலங்களில் உள்ள புண்ணிய தலங்களை தரிசிக்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும். குடும்பத்துடன் சுற்றுலா சென்று வருவதற்கான வாய்ப்பு, சிலருக்கு ஏற்படலாம். பிள்ளைகளின் வேலை மற்றும் படிப்புக்காக சிலரின் சிபாரிசை நாட வேண்டியிருக்கும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். தொழில் வியாபாரம் சுமாராகத்தான் இருக்கும். சக போட்டியாளர்களால் மறைமுக பிரச்சனைகள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் மாதமாக இருக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு அலுவலகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு போன்ற சலுகைகள் கிடைக்கக்கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சனி பகவான்
ஸ்லோகம்: ஓம் அருளுங்கால் இனியவனே போற்றி
பரிகாரம்: சனிஸ்வரருக்கு எள் தீபம்
சந்த்ராஷ்டமம்: சித்திரை 12 (25/4/26) சனிக்கிழமை இரவு 11.52 மணி முதல் 15 (28/4/26) செவ்வாய் அதிகாலை 5.35 மணி வரை.




**கும்ப ராசி அன்பர்களே!**

பங்குனி மாதம் உங்களுக்கு பல்வேறு நன்மைகளை கொண்டு வரும் மாதமாக அமையப் போகிறது. உறவினர்களால் சில பிரச்சனைகளை சந்திக்க வேண்டி வரலாம். வரவுகள் அதிகரித்து கையில் தாராளமாக பணம் புழங்கும். குடும்ப உறுப்பினர்களின் ஆசைகளை பூர்த்தி செய்து சந்தோஷத்தை உருவாக்குவீர்கள். வேலை காரணமாக சிலர் வெளிநாட்டுக்கு பறக்க வேண்டிய வாய்ப்பு ஏற்படும். குடும்பத்துடன் இன்பச் சுற்றுலா சென்று மனைவி பிள்ளைகளின் கனவை நனவாக மாற்றுவீர்கள். கடினமான வேலையைக் கூட அலுவலகத்தில் சுலபமாக செய்து முடிப்பீர்கள். மேலதிகாரிகளின் பாராட்டும் ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு விரும்பிய இடத்திற்கு மாற்றல் ஏற்படும். மாத பிற்பகுதியில் பணி அழுத்தம் அதிகரிக்கும். எச்சரிக்கையாக வேலை பார்க்க வேண்டும்.

தொழிலும் வியாபாரமும் ஏற்றமாக இருக்கும். போட்டியாளர்களின் எதிர்ப்புகள் முனை மழுங்கிப் போகும். வியாபாரம் நன்றாக நடப்பதால் கடையை விரிவுபடுத்துவீர்கள். வரவு செலவு கணக்குகளில் கவனமுடன் இருக்க வேண்டும்.

இல்லத்தரசிகளாக விளங்கும் பெண்களுக்கு சந்தோஷமான செய்திகள் கிடைக்கும் மாதமாக இது அமையும். ஆடை ஆபரணங்கள் பிராப்த்தி உண்டாகும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற சலுகைகள் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு கிடைக்கலாம்.

வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர்
ஸ்லோகம் : பைரவர் அஷ்ட்டோத்திரம்
பரிகாரம்: வெள்ளை புசணிக்காய்யில் தீபம்
சந்த்ராஷ்டமம்: சித்திரை 15 (28/4/26) செவ்வாய் அதிகாலை 5.36 மணி முதல் 17 (30/4/26) வியாழக்கிழமை பகல் 1.54 மணி வரை.




**மீன ராசி அன்பர்களே !**

பங்குனி மாத தொடக்கத்தில் சில பதட்டமான காரியங்களை சந்தித்தாலும் அடுத்தடுத்த நாட்களில் அவை தானாகவே சரியாகிவிடும். குடும்பத்தில் பொறுமை மிக முக்கியம். கணவன் மனைவிக்கிடையே திகழும் உறவு பிள்ளைகளின் சந்தோஷத்தை அதிகரிக்கும். ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது மிகவும் நல்லது. சுப நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாடுகள் நடைபெறும். பிரிந்து போன உறவுகளை ஒன்று சேர்ப்பதில் முனைப்புக் காட்டுவீர்கள். பள்ளிக்கால தோழரின் வருகையால் மகிழ்ச்சி உண்டாகும்.

பிள்ளைகள் படிப்பில் மிகவும் அக்கறையாக இருப்பார்கள். பணிச்சுமை அதிகமாக இருந்தாலும் சலிப்பில்லாமல் வேலை பார்ப்பீர்கள். அதிகாரிகளும் உங்களுக்கு அனுசரணையாக இருப்பார்கள். அரசு ஊழியர்களுக்கு மாத பிற்பகுதியில் சில சவால்களை சந்திக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும். ஆகவே எச்சரிக்கையாக பணி செய்வது முக்கியம். சிலருக்கு இடம் மாற்றமும் ஏற்படலாம். பதவி உயர்வும் கிடைக்கலாம்.

பெண்கள் நினைத்ததை நிறைவேற்றிக் கொள்ளும் மாதமாக இருக்கும். வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சியம்மன்
ஸ்லோகம்: ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
பரிகாரம்: மீனாட்சி அம்மைக்கு தீபம் ஏற்றுவது
சந்த்ராஷ்டமம்: சித்திரை 17 (30/4/26) வியாழக்கிழமை பகல் 1.55 மணி முதல் 19 (2/0/26) சனிக்கிழமை இரவு 12.22 மணி வரை.

# டிஜிட்டல் அரெஸ்ட் ஏமாற்று பேர்வழிகள்

## யாருக்கும் பணம் அனுப்பாதீர்கள்: IG திரு.பாலகிருஷ்ணன் IPS அவர்கள்



சமீபத்தில் பலருக்கும் காவல்துறை அதிகாரிகள் போல செல்போனில் உங்களை அழைத்து (வீடியோ கால்), " உங்கள் மேல கேஸ் இருக்கு, உங்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்க போறோம் என பயமுறுத்தி (Digital Arrest) பணம் கேட்கும் மோசடி அதிகரித்து வருகிறது. குறிப்பாக சீனியர் சிட்டிசன்கள் தான் அவர்களின் டார்கெட். தெரியாத நம்பர்களில் இருந்து வரும் அழைப்புகளையோ, வீடியோ அழைப்புகளையோ நம்பாதீர்கள். யாருக்கும் பயத்தில் பணம் அனுப்பாதீர்கள். காவல் துறையில் யாரும் கைது செய்யாமல் இருக்க பணம் கேட்க மாட்டார்கள். இத்தகைய கால்கள் வரும் போது உடனே, அருகில் உள்ள காவல் நிலையத்தை தொடர்பு கொள்ளுங்கள் அல்லது நேராக சென்று புகார் செய்யுங்கள். ஏதேனும் மோசடி என்று தெரிந்தால் உடனே 1930 என்ற எண்ணிலோ அல்லது cybercrime.gov.in இணையத்தில் புகார் செய்யுங்கள் என IG திரு.பாலகிருஷ்ணன் IPS தெரிவித்துள்ளார்.

**தலைமை நிருபர்: N.ராக்கேஷ் சுப்ரமணியன், திருச்சி.**

### சேதுபாவாசத்திரம் கடலில் 24 கிலோ கஞ்சா மீட்பு:

# மீனவர்களின் துரித நடவடிக்கை!



தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் அருகே கடலில் மிதந்த 12 கஞ்சா மூட்டைகளை மீனவர்கள் மீட்டு போலீசாரிடம் ஒப்படைத்தனர்.

நடந்தது என்ன? புதன்கிழமை மீன்பிடிக்கச் சென்ற குமார், சபரி, வல்லரசு ஆகிய மீனவர்கள் கரை திரும்பும்போது கடலில் 12 மூட்டைகள் மிதப்பதைக் கண்டனர். உடனடியாக படகு உரிமையாளர் ராஜமாணிக்கம் மற்றும் கடலோரக் காவல் படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்டவை: மீட்கப்பட்ட மூட்டைகளில் 24 கிலோ கஞ்சா இருந்தது உறுதி செய்யப்பட்டது. இந்த மூட்டைகள் நாகப்பட்டினம் போதைப்பொருள் நுண்ணறிவுப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கடலோரக் காவல் குழுமத்தினர் இது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மீனவர்களின் இந்த நேர்மையான செயலுக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

**நிருபர்: B.சத்தியராஜ், தஞ்சை.**



# விளம்பர கட்டண விபரம்

| | | |
|---|---|---|
| கலர் பின் அட்டை முழு பக்கம் | - | ரூ.20,000 |
| கலர் பின் அட்டை உள் பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் முழு பக்கம் | - | ரூ.18,000 |
| முன் அட்டை உள் பக்கம் அரை பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே முழு பக்கம் | - | ரூ.9,000 |
| மற்ற பக்கங்களின் உள்ளே அரை பக்கம் | - | ரூ.6,000 |

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438


## தொழில் நகரமான திருப்பூரில்..

# அதிகரித்து வரும் போலியான பத்திரிகையாளர்கள்




திருப்பூரில் தினசரி கூலி வேலைக்கு செல்லும் நபர்களை தேர்வு செய்து எங்கள் பத்திரிக்கையில் நீங்களும் ஒரு நிருபர் ஐடி கார்டு வாங்கிங்கொள்ளுங்கள். இந்த ஐடி கார்டை காண்பித்து மாவட்டத்தில் உள்ள டாஸ்மாக் கடைகளில் தினமும் ரூ.100 மாமுல் வாங்கிக்கொள்ளுங்கள் என பிரச்சாரம் செய்கிறார்களாம்.

அதாவது, திருப்பூர் மத்திய பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வரும் ஹோட்டலில் வேலை செய்து வரும் ஒரு நபரிடம் சிலர் பத்திரிக்கையாளர் என்று கூறி இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

ஒரு கடைக்கும் 100 ரூபாய் வசூலித்தால் 10 கடைக்கும் தினமும் 1000 ரூபாய் சம்பாதிக்கலாம் என ஆசை வார்த்தை காட்டி பேசி வருகின்றனராம்.

இந்த ஐடி கார்டுகளை வைத்துள்ள போலி பத்திரிக்கையாளர்கள், போலீஸாரின் வாகன சோதனையின் போது, "நான் பத்திரிகையில் இருக்கின்றேன் சார்" என்று பத்திரிகை பத்திரிக்கையாளர் புகைப்படத்தை காமித்து விட்டு தப்பிச் செல்கின்றனராம்.

திருப்பூரில் உண்மையாக உழைக்கும் பத்திரிகையாளர்களுக்கும் இது ரொம்பவும் அவமானமாக இருக்கிறதாம். தமிழ் ஒழுங்காக எழுதப் படிக்கத் தெரியாத ஒரு சில பத்திரிகையாளரும் திருப்பூரில் வசூல் செய்வதற்காக பத்திரிகையாளர் புகைப்படத்தை வைத்துக்கொண்டு வசூல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனராம். மதுபோதையில் வாகனத்தை இயக்கி விட்டு, போலீஸார் கேட்டால் பத்திரிக்கையாளர் என்று கூறுகிறார்கள். போலீசாரை மிரட்டும் சூழல் ஏற்பட்டு வருகிறது.

திருப்பூரில் பிழைப்பதற்கு ஏகப்பட்ட வழி இருக்கிறது. அவரவர் குடும்பத்தை கூலி வேலை செய்து காப்பாற்றுகிறார்கள். போலி பத்திரிக்கையாளர் ஐடி கார்டை ரூ.5000 கட்டி வாங்கிக் கொண்டு திருப்பூர் பகுதிகளில் வசூல் வேட்டையில் ஈடுபடுவர் மீது திருப்பூர் மாநகர போலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை வைக்கின்றனர். திருந்துமா இந்த நாடு? மனம் திரும்புவார்களா இவர்கள், போலீஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலைமை நிருபர்: A.மாரிராஜா, திருப்பூர்.









# பிள்ளைகளை தத்தெடுத்த தாய்

## 'பசியில்லா லால்குடி' அமைப்பினருக்கு வாழ்த்துகள்

லால்குடி அகிலாண்டேஸ்வரி நகரில் சசிரேகா(81) என்பவர் ஆதரவற்ற நிலையில் இறந்து கிடந்தார். தகவலறிந்து காவல் துறையினர் விரைந்து சென்று உடலை கைபற்றி அரசு மருத்துவமனைக்கு எடுத்து சென்று, அவரைப் பற்றி விசாரித்தனர்.

உறவினர்கள் யாரும் வராத காரணத்தால் லால்குடியில் இயங்கிவரும் 'பசியில்லா லால்குடி' நண்பர்கள் அமைப்பை தொடர்பு கொண்டு அவரின் இறுதி சடங்கை செய்ய பணிந்தனர். இதனை ஏற்று அந்த அமைப்பை சேர்ந்த ஆட்டோ கணேசன், மணிகண்டபிரபு, பூவாளூர் செந்தில் குமரன், எஸ்.டி. கொரியர் செந்தில் ஆகியோர், லால்குடி காவல் உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்கள் வழிகாட்டுதலின் பேரில், பெண் காவலர் விஜி முன்னிலையில் சசிரேகா அவர்களுக்கு பிள்ளைகளாக இருந்து அந்த தாயின் உடலை லால்குடி நகராட்சி சிறுதையூர் பொது மயானத்தில் உரிய மரியாதையுன் நல்லடக்கம் செய்தனர். ஆதறவற்ற நிலையில் உள்ள எந்த உயிருக்கும், உறவாக இருக்கும் பசியில்லா லால்குடி அமைப்பினருக்கும், போலீஸாருக்கும் வாழ்த்துகள்.

இறந்த பிறகும் பிள்ளைகளை தத்தெடுத்த சசிரேகா அம்மையாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திப்போம்.

**நிருபர்: தங்க.பாண்டியன், லால்குடி.**

# தந்தையின் இனிஷியலை போல தாய் இனிஷியலையும் பயன்படுத்தலாம்

## சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி எம்.எஸ்.ரமேஷ் அவர்கள் தீர்ப்பு

திருச்சியை சேர்ந்த விவாகரத்து ஆன பெண் ஒருவர் தனக்கென ஒரு குழந்தை வேண்டும் என கருதி, விந்தணு கொடையாளர் ஒருவரது உதவியுடன் செயற்கை கருத்தரிப்பு செய்து பெண் குழந்தை ஒன்றை பெற்றெடுத்தார்.

அந்த குழந்தையின் பிறப்பு சான்றிதழுக்கான மனுவில் குழந்தையின் தந்தை பெயர் என்னும் இடத்தை பூர்த்தி செய்ய சொல்லி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளார். எனவே, மாநகராட்சி அலுவலகத்தில் முறையிட்ட போது விந்தணு கொடையளித்தவரின் பெயரை இணைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அந்த பெண், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

அதில், தான் ஒற்றை பெற்றோராக இருக்கும் பட்சத்தில் தாயின் பெயர் மட்டுமே பிறப்பு சான்றிதழில் பதிவு செய்தால் போதுமானது என அறிவிக்க வேண்டும் என மனுவில் கூறியிருந்தார்.

இதை விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற மாண்புமிகு நீதிபதி எம்.எஸ். ரமேஷ் அவர்கள் ஒரு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பை அதிரடியாக வழங்கினார்.

அந்த தீர்ப்பில், தந்தையை இழந்த குழந்தை அல்லது தந்தையை பிரிந்து தாயின் பாதுகாப்பில் மட்டும் வளரும் குழந்தை, தந்தையுடைய வருமானம் இன்றி தாயின் வருமானத்தில் மட்டுமே வளரும். வாழும் குழந்தையின் பிறப்புச் சான்றிதழில், தாயின் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டிருந்தாலே போதுமானது. தந்தையுடைய பெயர் அல்லது முதலெழுத்து (இனிஷியல்) சேர்க்க வேண்டிய கட்டாயமில்லை எனவும், பள்ளி சேர்க்கை மற்றும் சொத்து பதிவு ஆகியவற்றிற்கும் இது பொருந்தும் என தீர்ப்புனை வழங்கினார்.



நமது இந்தியா போன்ற நாடுகளில் பெண்கள் திருமணமாகாமலே அல்லது திருமணமாகி கணவனால் புறக்கணிக்கப்பட்டும், கற்பவதிகளாகி கயவர்களால் கைவிடப்படுவதும் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு இனிஷியல், பள்ளி சேர்க்கையின்போது தந்தையின் பெயர் கேட்டு ஏற்படுத்திய பிரச்சினைகளுக்கு ஒரு விடிவுகாலமாக இந்த தீர்ப்பு அமைந்துள்ளது.

இனி தந்தையின் இனிஷியலை போல தாயின் இனிஷியலையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கிற சீர்திருத்தத்திற்கு வலுச்சேர்க்கும் விதமாக இந்த தீர்ப்பு அமைந்துள்ளது என பெருமை கொள்வோம்.


- வழக்கறிஞர் டாக்டர் R.ராமச்சந்திரன்,
B&W Legal Solution, Trichy - 620 001.
Mobile: 94886 83399, 94899 04575.


---



ஆண் பெண்

## லிங்க முத்திரை

இரு கை விரல்களையும் படத்தில் காட்டியபடி கோர்த்துக் கொள்ளவும். வலது பெருவிரலை நீட்டிக் கொள்ளவும். வலது பெருவிரலை இடது பெருவிரல் மற்றும் சுட்டு விரல்களால் சுற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். இதேபோல, இடது பெருவிரலை நீட்டியபடியும் செய்யலாம். மார்புக்கு நேராகக் கைகளைப் பிடித்துக்கொண்டு இந்த முத்திரையை செய்யவும். சுவாசத்தை நன்றாக உள்ளிழுத்து வெளிவிடவும். இந்த முத்திரை உடலிலுள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. நுரையீரலிளுள்ள உறைந்த சளியை இளக்கி வெளியேற்றுகிறது. ஆஸ்துமா, சளி, மார்பு சம்பந்தமானன நோய்கள் அகலச் சிறந்த முத்திரையாகும். சம்மணங்காலிட்டு தினமும் 10 நிமிடம் செய்க.

# 'நீதி தேவதை' ரேவதி

## சாத்தான்குளம் ஜெயராஜ், பென்னிக்ஸ் மரணத்திற்கு அத்தனை அழுத்தங்களை மீறி சாட்சியம் அளித்தவர்



அதிகார பலம், துறை சார்ந்த அழுத்தம், சக பணியாளர்களின் எதிர்ப்பு என அத்தனை சவால்களையும் தாண்டி, "தர்மம்" எங்கே இருக்கிறதோ அங்கே தன் சாட்சியத்தை நிலைநிறுத்திய ஒரு பெண்மணியைப் பற்றி நாம் பேசியே தீர வேண்டும். அவர்தான் தலைமை காவலர் ரேவதி.

சாத்தான்குளத்தைச் சேர்ந்த தந்தை ஜெயராஜ் மற்றும் மகன் பென்னிக்ஸ் ஆகியோரின் மரணத்திற்கு நீதி கிடைக்கப் போராடிய அந்த இருண்ட நாட்களில், ஒட்டுமொத்தத் துறையுமே மௌனம் காத்தபோது, தனி ஒருத்தியாகத் துணிச்சலுடன் முன்வந்து சாட்சியம் அளித்தவர் இவர்.

தான் அணிந்திருக்கும் சீருடைக்கும், தான் வாங்கும் சம்பளத்திற்கும் துரோகம் செய்யாமல், தன் மனசாட்சிக்கு உண்மையாக இருந்த அந்தத் தைரியம் சாதாரணமானது அல்ல.

மேலதிகாரிகள், உடன் பணியாற்றியவர்கள் என்ற பாகுபாடின்றி, அநீதி நடந்த இடத்தில் மௌனமாக இருப்பது கூடக் குற்றம்தான் என்பதை உணர்ந்து அவர் அளித்த அந்தச் சாட்சியமே, இன்று குற்றவாளிகள் தப்பிக்க முடியாமல் தண்டிக்கப்பட மிக முக்கியக் காரணமாக அமைந்தது.

உண்மையான "நீதி தேவதை" நீதிமன்றத்தில் மட்டும் இல்லை, நேர்மையான மனிதர்களின் வடிவிலும் இருக்கிறாள் என்பதற்கு தலைமை காவலர் ரேவதி ஒரு சிறந்த உதாரணம். அதிகார வர்க்கத்திற்கு அஞ்சாமல் நீதியின் பக்கம் நின்ற இந்தச் சகோதரிக்கு நமது மனமார்ந்த வாழ்த்துகளும், சிரம் தாழ்ந்த நன்றிகளும்.

இவரைப் போன்ற நேர்மையான அதிகாரிகள் இருக்கும் வரைதான் சாமானிய மக்களுக்குச் சட்டத்தின் மீது நம்பிக்கை பிறக்கிறது.


### வழக்கின் பின்னணி

இந்த வழக்கில் கடந்த ஏப்.6–ம் தேதி வழங்கப்பட்ட இந்த வழக்கின் தீர்ப்பு: நேர்மையான அதிகாரிகள் பலர் உள்ள நிலையில், ஒரு சிலரின் இத்தகைய செயல் ஒட்டுமொத்தத் துறைக்கும் களங்கத்தை ஏற்படுத்துகிறது. ஆய்வாளர் ஸ்ரீதர், சார்பு ஆய்வாளர்கள் பாலகிருஷ்ணன், ரகுகணேஷ் மற்றும் காவலர்கள் முருகன், சாமதுரை, முத்துராஜா, செல்லத்துரை, தாமஸ் பிரான்சிஸ், வெயிலுமுத்து ஆகிய 9 பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

குற்றவாளிகள் 9 பேருக்கும் சேர்த்து மொத்தம் ரூ.1 கோடியே 40 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டது. இதில் ஆய்வாளர் ஸ்ரீதருக்கு மட்டும் ரூ.15 லட்சம் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது. இந்தத் தொகை பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு இழப்பீடாக வழங்கப்பட வேண்டும்.

தீர்ப்பை வாசித்து முடித்ததும், அதன் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையில் நீதிபதி தான் பயன்படுத்திய பேனாவை உடைத்தார்.

நிருபர்: N.ராமசாமி, தூத்துக்குடி.



**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**

**அன்றே யொழிய விடல். (113)**

விளக்கம்: நன்மையே தருவதாக இருந்தாலும் நீதியை விட்டு விலகுவதால் வரும் லாபத்தை, அப்பொழுதே விட்டு விடுக.



நாகப்பட்டினம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சுஜித் குமார் IPS அவர்கள் நகர காவல் நிலையம், வெளிப்பாளையம், திருக்குவளை, நாகூர், திட்டச்சேரி, திருக்கண்ணபுரம், வலிவலம், கீழ்வேளூர், வேளாங்கண்ணி மற்றும் கீழையூர் ஆகிய காவல் நிலையங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும், தேர்தலை முன்னிட்டு பொதுமக்கள் அனைவரும் சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாக்களிக்க காவல் துறையினர் உறுதுணையாக இருந்து சிறப்பாக பணியாற்ற வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

**இணை ஆசிரியர்: U.மதனகோபால்**

---



**திருநெல்வேலியில் மோப்ப நாய் பிரிவிற்கு புதிதாக வாங்கப்பட்ட நாய் குட்டிக்கு**

# ப்ரௌனி என பெயர் சூட்டிய காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS அவர்கள்

திருநெல்வேலி மாநகர காவல் துறையில் செயல்படும் மோப்ப நாய் பிரிவில் தற்போது வெடிகுண்டு வழக்குகளை துப்பறிய ரெமோ, சூப்பர் என்ற 2 மோப்ப நாய்களும், குற்ற வழக்குகளை துப்பறிய பரணி என்ற மோப்ப நாயும், போதை பொருட்களை துல்லியமாக கண்டறிய லக்கி என்ற நாய் உட்பட 4 மோப்ப நாய்கள் பணியில் உள்ளன.

இந்நிலையில் திருநெல்வேலி மாநகர துப்பறியும் மோப்ப நாய் பிரிவிற்கு குற்ற வழக்குகளை துப்பறியும் அலுவலுக்காக புதிதாக நாய் குட்டி ஒன்று வாங்கப்பட்டுள்ளது.

26.03.2026 அன்று புதிதாக வாங்கப்பட்ட நாய் குட்டிக்கு திருநெல்வேலி மாநகர காவல் ஆணையர் திரு.தேஷ்முக் சேகர் சஞ்சய் IPS அவர்கள் ப்ரௌனி (Brownie ) என பெயர் சூட்டினார். மேலும் மோப்ப நாய்களை நல்ல முறையில் பயிற்சி அளிக்கவும், நல்ல முறையில் பராமரிக்கவும் மோப்ப நாய் பிரிவு காவல் துறையினருக்கு அறிவுரை வழங்கினார். உடன் காவல் துணை ஆணையர் திரு.S.விஜயகுமார் (கிழக்கு) மற்றும் காவல் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

**நிருபர்: R.ஜோதிபாசு, திருநெல்வேலி**

# எளிய உயிர்களின் பசி நீக்குவதே முதல் அறமாகும்

ஓம் காளி ஓம் நமசிவாய



**கருடசித்தர்**

**Dr.பாலகிருஷ்ண சுவாமி**

எரசை, தேனி மாவட்டம்.

நம் அகண்ட பாரத தேசம் ஒரு அன்பான தெய்வீக தேசமாகும். நம் பாரத தெய்வீக வழிபாட்டில் அனைத்து உயிர்களையும் அன்பாக பார்க்கப்படுகிறது. நம் பாரத தெய்வீக தர்மம் ஆகும்.

நம் சித்தர்கள் அனைவரும் உயிர்களின் பசி நீக்கி உணவு படைப்பதை முதல் அறமாக கருதினார்கள். பிற உயிர்களின் பசி நீக்குவதை தெய்வீக தொண்டாக கருதினார்கள். 63 நாயன்மார்களும் ஆழ்வார்களும் இந்த சேவையை தெய்வீக வழியில் செய்து மக்களுக்கு வழிகாட்டினார்கள்.

**உணவு அளிப்பதே முதல் தொண்டு**

மனிதனுக்கு மட்டும் உணவு கொடுத்து பசி நீக்குவது சுய நலத் தொண்டாகும். ஏனென்றால் தன் இனமான மனிதன் பசி மட்டும் நீக்குகின்றான். அதுவும் ஒரு சுயநலமே. நம்மை சுற்றி அனைத்து உயிர்களும் வாழ்கின்றது. குருவி, காகம், புறாக்கள், நாய், குரங்கு, எறும்புகள், மாடுகள், பூனைகள் இன்னும் எத்தனையோ உயிர்கள் பசியால் நம்மைச் சுற்றி உணவும் நீருக்காக அலைந்து கொண்டு இருக்கின்றது. இவைகளுக்கு உணவும் நீரும் கொடுப்பது பொது நலத் தொண்டாகும்.

**பொதுநலத் தொண்டு**

பொது நலத் தொண்டு என்பது அனைத்து உயிர்களையும் அன்பு செய்து அரவணைத்து அவைகளின் தேவைகளான உணவும் நீரும் கொடுப்பதே பொதுநலத் தொண்டாகும்.

**இயற்கை சேவையை ஈசன் சேவை**

ஈசன் அனைத்து உயிர்களுக்கும் சேவை செய்யும் மனிதனையே விரும்புகின்றார். இயற்கையின் சேவையே ஈசனின் சேவையாகும். இப்படிப்பட்ட தர்மத்தையே நம் சித்தர்களும் யோகிகளும், ரிஷிகளும், ஞானிகளும் நம் பாரத மக்களுக்கு கற்றுக் கொடுத்து உள்ளார்கள். இதையே சைவர்களும் வைணவர்களும் கடைப்பிடிக்கிறார்கள்.

நம் ஆலயங்களுக்குச் சென்றால் அங்கு ஸ்தல விருட்சம் இருக்கும். ஒவ்வொரு ஆலயத்திற்கும் ஒவ்வொரு ஸ்தல வரலாறும் ஸ்தல விருட்சமும் இருக்கும். அனைத்து கோவில்களிலும் மூலிகைச் செடிகளும் வளர்க்கப்படும். ஒவ்வொரு கோயிலும் ஒவ்வொரு எளிய உயிர்களுக்கும் அடைக்கலமாக இருக்கும்.

ஒரு கோவிலில் காகத்திற்கு உணவு படைப்பார்கள். மற்றொரு கோவிலில் குரங்குக்கு உணவு படைப்பார்கள். வேறொரு கோவிலில் மாடுகளுக்கும், நாய்களுக்கும் உணவு படைத்து அரவணைப்பார்கள். கோவில்கள் அனைத்து எளிய உயிர்களின் ஆதாரமாக உள்ளது. அனைத்து பறவைகளுக்கும் அனைத்து விலங்குகளுக்கும் கோவில்களில் ஆதரவு அளிக்கும் நம் முன்னோர்கள் கற்றுக் கொடுத்துள்ளார்கள். அந்த கலாச்சாரம் இன்றைய மக்கள் கோவில்களில் கடைப்பிடிப்பது குறைந்துவிட்டது.

**கோவிலுக்குச் சென்றால் யாருக்குப் பலனில்லை**

நம் கண் முன்னே எளிய உயிர்கள் பசியோடு இருக்கும்போது அவைகளை கண்டு



கொள்ளாமல் அவைகளை வெறுத்துவிட்டு கோவிலுக்கு தினமும் சென்று வழிபடுவதால் ஒரு பயனும் இல்லை.

நம் கண் முன்னே இருக்கும் எறும்பு, காகம், நாய், குருவி, பறவைகளுக்கு நம்மால் முடிந்தவரை உணவும் நீரும் கொடுத்து விட்டு, கோவிலுக்குச் சென்றால் தெய்வ அருள் முழுமையாக கிடைக்கும்.

ஈசனாகிய இறைவன் மனிதனுக்கு மட்டும் உரிமையானவன் அல்ல. அனைத்து உயிர்களுக்கும் உரிமையானவன். அனைத்து உயிர்களும் அவரிடம் இருந்து பிரிந்து வந்த ஜீவாத்மாக்கள் ஆகும்.

**வள்ளலார் கூறிய அன்பின் அறம்**

அருட்பெருஞ்சோதி வள்ளலார் திருவருட்பாவில் அனைத்து உயிர்களையும் நேசித்து தம்உயிர் போல எண்ண வேண்டும் என்று கூறுகிறார்.

**திருவருட்பா**

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரம்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை யுடையவராய் உவக்கினார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்திருவாய் எம்பெருமான் நடம் புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கோவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்தா தாலோ

என்று அனைத்து உயிர்களிடமும் அன்பு செய்யும் தத்துவத்தை வள்ளலார் கூறுகின்றார்.

அருட்பெருஞ்சோதி வள்ளலார் உயிர்களின் மேல் அன்பு செலுத்தி அவைகளுக்கு உணவு படைப்பதே முழுமையாக கூறுகின்றார். மனிதன் மட்டும் அல்ல, அவர் வாடிய பயிரை கண்ட போதெல்லாம் மனம் வாடியவர் வள்ளலார். உயிர்களின் ஜீவ காருண்ய அன்பின் அறத்தை உலகுத்துக்கு முழுமையாக போதித்தவர் வள்ளலார் ஆவார்.

*வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம்*
*வாடினேன் பசியினால் இளைத்தே*
*வீடுதோறிரந்தும் பசியாறதயார்ந்த*
*வெற்றைரைக் கண்டுளம் பதைத்தேன்*
*நீடிய பிணியால் வருகின்றோர் என்*
*நேருறக் கண்டுளந்துடித்தேன்*
*ஈடில் மாணிகளாய் ஏழைகளாய் நெஞ்சு*
*இளைத்தவர் தமைக் கண்டே இளைத்தேன்.*

என்று பிற உயிர் வாடித் துன்பப்படுவதை தன் துன்பமாக கருதி வாழ்ந்தவர் வள்ளலார்.

எளிய உயிர்களின் பசி நீக்கும் அறமே முதல் அறமாக கடைபிட்தது வாழ்ந்தவர் வள்ளலா்.

**கோடைக் காலங்களில் நாம் செய்யும் அறம்**

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் நம் வீட்டின் மாடியில் அரிசியும் நீரும் பறவைகளுக்கு வைக்க வேண்டும். நாய்கள் இருக்கும் இடத்துக்கு சென்று தண்ணீர் தர வேண்டும்.

நம் தோட்டம் காடுகளில் ஒரு பாத்திரத்தில் நீரும் அரிசியும் வைக்க வேண்டும். அனைத்து பறவைகளும் நீர் அருந்தி அரிசி உண்டு பசியாறும். இதை ஒவ்வொரவரும் ஒரு தெய்வீகக் கடமையாக செய்யவேண்டும். இப்படி செய்வது



நம் ஆன்மாவுக்கு மிகப்பெரிய புண்ணியத்தை கொடுக்கும்.

**திருமூலரின் பசி நீக்கும் அறம்**

பல ஞானங்களையும் பலயோகங்களையும் ஆயற்கலை 64–யும் கற்ற சித்தர்களும் பசி நீக்கும் அறத்தை வலியுறுத்த தவறவில்லை. அந்த வழியில் திருமூலர் பாடலில் கூறுகின்றார். பெரிய அளவு பசி நீக்கும் அறம் செய்யாவிட்டாலும், நம்மால் முடிந்தவரை பசிநீக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

**திருமந்திரம்**

*யாவருக்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை*
*யாவருக்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை*
*யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைபிடி*
*யாவருக்குமாம் பிறருக்கு இன்னுரைதானே*

விளக்கம்: எந்த மலர்கள் அப்போது நமக்கு கிடைக்காவிட்டாலும் இறைவனுக்கு ஒரு பச்சிலையை கொண்டு பூஜை செய்யுங்கள். பசுவிற்கும் முடிந்தவரை உணவு கொடுங்கள்.

நாம் சாப்பிடும்போது வறியவருக்கு முடிந்த அளவு ஒரு கைப்பிடி அளவாவது உணவு கொடுங்கள். பிறரிடம் இனிமையான வார்த்தையை பேசுங்கள் என்று நம்மால் முடிந்தவரை உதவி செய்ய வேண்டும் என்று கூறுகின்றார். நம் முன்னோர்கள் அனைவரும் அன்னதானம் செய்வதும் மற்ற உயிர்களுக்கு உணவு அளிப்பதையும் தெய்வீக வழியில் நமக்கு கற்றுக் கொடுத்துள்ளார்கள்

**அனைத்து மதங்களும் அன்பு போதிக்கின்றது**

இந்து கோவில்களில் அன்னதானம் செய்யப்படுகின்றது. இஸ்லாம் மார்க்கத்தில் ஏழை எளியோருக்கு உணவு படைப்பதும் உதவி செய்வதும் முக்கியமாக கடைப்பிடிக்கப்படுகிறது. இறைவனை தொழுவதில் ஏழை பணக்காரர் என்ற பாகுபாடு இல்லை.

அனைவரும் ஒன்றாக வழிபடும் உயர்ந்த கொள்கையை கடைப்பிடிக்கும் மார்க்கமாக இஸ்லாம் மார்க்கம் இருக்கின்றது. நோன்பு விரதமாக இருந்துஅனைத்து மக்களுக்கும் உணவு அளிக்கப்படுகின்றது.

கிறிஸ்தவ சமயத்திலும் இயேசு கிறிஸ்துவின் அன்பு போதனை அனைத்து மக்களையும் ஈர்க்கின்றது. உன்னைப் போல் பிறரை நேசி என்ற அன்புக் கொள்கையை கிறிஸ்தவ வேதம் போதிக்கின்றது.

5,000 ஏழைகளுக்கு அற்புத சக்தியால் உணவளித்து பசி நீக்கும் அறத்தை போதித்தவர் இயேசு கிறிஸ்துவாவார்.

18 சித்தர்களும் ஆழ்வார்களும் நாயன்மார்களும் வள்ளலாரும் நபிகள் நாயகமும் இயேசுவின் அன்பு வழியும் அனைத்தும் உண்மையாக புரிந்து கொண்டால் மனிதனின் ஆன்மா இறைவனை அடையச் செய்யயும் வழியையே போதிக்கின்றது. அனைத்து மதங்களும் பசி நீக்கும் அறத்தை, அந்தந்த காலத்தின் சூழ்நிலைக்கு ஏற்ப போதிக்கின்றது. அனைத்து வேதங்களின் சாரமும் அன்பையும் அமைதியையும் பசி நீக்கும் அறத்தையும் போதிக்கின்றது. அனைவரும் சாதி, மொழி, இன, மத பேதங்களை கடந்த நம் பாரத தாயின் பிள்ளைகள் என்ற உணர்வோடு மனித நேயமாக வாழ்வோம்.

# கவலை இல்லை


திறமையின்மை, அச்சம் இவையிரண்டும் கவலைகளைப் பெருக்கும் மன நிலைகளாகும். மனத்தின் விழிப்பு நிலை பிறழ்ந்த மயக்க நிலையும், இயற்கையின் ஒழுங்கமைப்பை அறியாமையும், எளிதில் தீர்வு காணத் தக்க கூர்மை அறிவை வளர்க்கும் சிந்தனைப் பயிற்சியின்மையும் திறமையின்மையாகும்.

தவறான செயல்களின் விளைவைக் கண்டோ அல்லது தனது வாழ்வின் போக்கில் ஊறு விளைவிக்கும் என்று கற்பனை செய்து கொண்டோ, துணிவிழந்து வருந்துதல் அச்சமாகும்.

கவலையால் உடல், உள்ள நலன்கள் கெடுகின்றன. ஏன்? வாழ்வே துன்பமாகவும், தோல்வியாகவும் அமைந்து விடுகிறது. இதனை மனிதன் ஒழித்தேயாக வேண்டும்.

கவலையை ஒழிக்க வேண்டுமெனில்






இயற்கையின் ஒழுங்கமைப்பை அறிய வேண்டும். சிந்திக்கும் திறனைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை வேண்டும். முயற்சி வேண்டும். துணிவு வேண்டும். மாறாத இயற்கை விதிகளை உணர்ந்து கொள்ளல், சமுதாய ஒழுங்கமைப்பைப் புரிந்து, மதித்து வாழ்தல், தன்னிலை விளக்கம் பெற்றுப் பிறவியின் லட்சியத்திற்கு ஒத்த இசைவான வகையில் வாழ்க்கை நடைமுறைகளை அமைத்துக் கொள்ளல் என்ற அறிவுடைமை வந்துவிட்டால் தானே சிக்கல்களைத் தோற்றுவித்துக் கொள்ளாத தகைமை கிடைக்கிறது. சிக்கல்கள் இல்லாமல் போகவே, துன்பமில்லை, கவலையுமில்லை என்றாகி வாழ்வே ஓர் இன்பச் சோலையாக மாறிவிடும்.

**- அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி**



## திருட்டு பைக்; கைகொடுத்த தரவுகள்

# மாணவி கொலை வழக்கில் குற்றவாளி சிக்கியது எப்படி?; SP மதன் IPS விளக்கம்

வேடநத்தம் கிராமத்தில் 12–ம் வகுப்பு மாணவி மர்மமான முறையில் படுகொலை செய்யப்பட்ட வழக்கில், 5 பேரின் டி.என்.ஏ மாதிரி எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பப்பட்டது

இதில், ஒருவரின் டி.என்.ஏ மாதிரி மற்றும் மாணவியின் நகத்தில் இருந்த சிறிய சதைத் துணுக்கு மூலம் நடத்தப்பட்ட பரிசோதனையில் ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடியைச் சேர்ந்த தர்ம முனீஸ்வரன் என்பவர் கொலையாளி எனக் கண்டறியப்பட்டார்.



இந்த நிலையில், செய்தியாளர்களைச் சந்தித்த SP மதன் IPS அவர்கள், “தூத்துக்குடி மாணவி கொலை வழக்கு, போக்சோ வழக்கு என்பதால், சில தகவல்களை மட்டுமே தர முடியும். குற்றப் பின்னணி கொண்டவர்களின் தகவல்களை முழுமையாக ஆய்வு செய்தோம். டிஜிட்டல் ஆவணங்கள், சுமார் 800–க்கும் மேற்பட்டவர்களிடம் நடத்திய நேரடி விசாரணை மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஒரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார். 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டன. மேலும் 4 டி.எஸ்.பி–க்கள், 6 இன்ஸ்பெக்டர்கள் உட்பட 150 காவலர்கள் விசாரணை மற்றும் குற்றவாளிகளைத் தேடும் பணியில் முழுவீச்சில் ஈடுபட்டனர்.

புலனாய்வுப் பிரிவு, மோப்பநாய் பிரிவு என வெவ்வேறு கோணங்களில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் சி.சி.டி.வி கேமராக்கள் இல்லை என்ற போதிலும் அந்தப் பகுதியைச் சுற்றி பல பகுதிகளில் உள்ள 98 இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமராக்களில் சேகரிக்கப்பட்ட தகவல் அடிப்படையில் 2,514 தொலைபேசி தகவலும் சேகரிக்கப்பட்டன.

வேறு குற்றப் பின்னணி உள்ள நபர்கள் குறித்து பார்த்து கண்காணித்து, அவர்களிடம் விசாரணை மேற்கொள்ள பல குழுவினர் விசாரணை மேற்கொண்டனர். நேரடியாக மற்றும் டிஜிட்டல் முறையில் தகவல் சேகரிக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் படத்தையும் பெயரையும் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இதுவரை அதை பயன்படுத்திய 6 பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து அனைத்து கிராமங்களிலும் 10 சி.சி.டி.வி கேமராக்கள் பொருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன. அனைத்து கிராமங்களிலும் பெண் போலீஸார் மூலம் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

விசாரணையின்போது, சம்பவ இடத்திற்கு அருகில் ஒரு சந்தேகத்திற்குரிய இருசக்கர வாகனம் நின்றதும், பின்னர் அது மாயமானதும் தெரியவந்தது. அருகில் இருந்த காற்றாலை (Windmill) சி.சி.டி.வி காட்சிகளை ஆய்வு செய்தபோது, அந்த வாகனம் நடமாடியது உறுதியானது. அந்த வாகனத்தின் பதிவு எண் மாற்றப்பட்டிருந்ததும், அது ராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் காவல் நிலையத்தில் பதிவான ‘திருட்டு பைக்’ என்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

சமீபத்தில் சிறையிலிருந்து விடுதலையா னவர்களின் பட்டியலை அந்தத் திருட்டு பைக்கோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, தர்ம முனீஸ்வரன் என்பவர் மீது சந்தேகம் வலுத்தது. இவர் ஏற்கெனவே ஒரு கடுமையான குற்ற வழக்கில் தண்டனை பெற்று, கடந்த 2025 டிசம்பர் மாதம் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டு ஜாமீனில் வெளியே வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

விசாரணையில், மாணவியைத் தனிமையில் வழிமறித்துக் கடத்தி, பாலியல் அத்துமீறலில் ஈடுபட முயன்றபோது மாணவி எதிர்த்ததால், அவரை கழுத்தை நெரித்துக் கொலைசெய்ததை ஒப்புக்கொண்டார். இந்த வழக்கை உயர் நீதிமன்றம் கண்காணித்து வருகிறது. குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனையை பெற்றுத் தருவோம்” என்றார்.

**நிருபர்: N.ராமசாமி, தூத்துக்குடி.**

# திரு.சந்தீப் ராய் ரத்தோர் IPS அவர்கள் தமிழக டிஜிபியாக நியமனம்

தமிழ்நாடு சட்டம் ஒழுங்கு பொறுப்பு DGP–யாக இருந்த வெங்கடராமனை தேர்தல் ஆணையம் அதிரடியாக மாற்றியுள்ளது. அவருக்கு பதில் சட்டம் – ஒழுங்கு புதிய DGP–யாக திரு.சந்தீப் ராய் ரத்தோர் IPS நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தமிழக சட்டம் ஒழுங்கு DGP–யாக (காவல்துறை தலைவர்) திரு.சங்கர் ஜிவால் IPS அவர்கள் இருந்தார். இவர் கடந்த 2025ம் ஆண்டு ஆகஸ்ட் 31ம் தேதி பணி ஓய்வு பெற்றார். இதையடுத்து தமிழகத்துக்கு புதிய டிஜிபி நியமனம் செய்யப்பட்டு இருக்க வேண்டும். ஆனால் தமிழகத்துக்கு புதிய DGP நியமனம் செய்யப்படவில்லை. தமிழக அரசு சார்பில் பொறுப்பு DGP_யாக திரு.ஜி.வெங்கடராமன் அவர்கள் நியமனம் செய்யப்பட்டார். இவர் தான் கடந்த 8 மாதங்களாக காவல்துறை தலைவராக (பொறுப்பு) செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில் தான் விரைவில் தமிழக சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. ஏப்ரல் 23–ம் தேதி ஓட்டுப்பதிவும், மே 4–ம் தேதி தேர்தல் முடிவுகளும் வெளியாக உள்ளது. இந்நிலையில் தான் இந்திய தேர்தல் ஆணையம் அதிரடியாக தமிழகத்துக்கு புதிய DGP–யை நியமனம் செய்துள்ளது. பொறுப்பு DGP–யாக இருந்த திரு.வெங்கட்ராமன் IPS அவர்களுக்கு பதில் புதிய DGP–யாக IPS அதிகாரி திரு.சந்தீப் ராய் ரத்தோர் IPஏ நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

### 1992 'பேட்ச்' அதிகாரி

DGP–யாக நியமிக்கப்பட்டுள்ள திரு.சந்தீப் ராய் ரத்தோர் IPS 1992–ம் ஆண்டு பேட்ச்சை சேர்ந்த IPS அதிகாரி ஆவார். இவர் தமிழகத்தின் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார். கோவையில் துணை கமிஷனராக பணியாற்றிய அனுபவம் கொண்டவர். 1998–ம் ஆண்டு கோவையில் நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவத்தில் குற்றவாளிகளை கைது செய்ததில் முக்கிய பங்காற்றியவர்.

### சென்னை - ஆவடியில் பணி

சென்னை மாநகர போக்குவரத்து துணை கமிஷனராக பணியாற்றியபோது சிக்னல் விளக்குகளுக்கு பதில் எல்.இ.டி சிக்னல்களை




அறிமுகம் செய்தார். சிபிசிஐடி எஸ்பியாக பணியாற்றியபோது முத்திரை தாள் மோசடி வழக்கை விசாரித்து குற்றவாளிகளை கைது செய்வதில் கவனம் பெற்றார். 2005–ல் தூத்துக்குடி எஸ்பி 2010–ல் மத்திய தொழிலக பாதுகாப்பு படை DIG, 2016–ல் கடலோர பாதுகாப்பு குழும IG, 2019–ல் தமிழக சீருடை பணியாளர் தேர்வாணைய தலைவர் உள்ளிட்ட பதவிகளை வகித்தார். இதுதவிர தேசிய மீட்பு படை தலைவராவும் செயல்பட்டார். ஆவடி மாநகர போலீஸ் கமிஷனர் அலுவலகத்தில் முதல் கமிஷனராக பணியாற்றினார். பிறகு சென்னை மாநகர போலீஸ் கமிஷனராக பணியாற்றினார்.

### சென்னை கமிஷனராக பணியாற்றியவர்

சென்னை மாநகர கமிஷனராக பணியாற்றியபோது பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை நடந்தது. இது சென்னையில் சட்டம் ஒழுங்கு குறித்து விவாதங்களை எழுப்பிய நிலையில், மாநகர காவல் ஆணையர் திரு.சந்தீப் ராய் ரத்தோர் IPS அவர்களை தமிழக அரசு அதிரடியாக பணியிட மாற்றம் செய்தது.

திரு.சந்தீப் ராய் ரத்தோர் IPS தற்போது தமிழ்நாடு காவலர் பயிற்சி கல்லூரி DGP–யாக பணியாற்றி வந்த நிலையில் சட்டசபை தேர்தலையொட்டி இந்திய தேர்தல் ஆணையம் அவரை தமிழக சட்டம் –ஒழுங்கு DGP–யாக அவர் நியமனம் செய்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முதன்மை ஆசிரியர்: M.கண்ணன், சென்னை.

# சின்ன
# வெங்காயத்தின்
# பலன்கள்



***ஒரு கைப்பிடி சின்ன வெங்காயம் இருந்தாலே போதும்.. சின்ன சின்ன உடல்நலக் கோளாறுகளையும் அசால்ட்டாக தீர்க்கலாம். எப்படி தெரியுமா? 100 கிராம் சின்ன வெங்காயத்தில் நீர்ச்சத்து, புரதம், கார்போஹைடிரேட், கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச்சத்தும், வைட்டமின் "B", வைட்டமின் "C" கொழுப்பு, தாது உப்புகள், நார்ச்சத்து இப்படி அனைத்தும் அடங்கியிருக்கின்றன.***

காரத்தன்மை: வெங்காயத்தின் காரத்தன்மைக்கு காரணம் "அலைல் புரோப்பைல் டை சல்பைடு" என்ற எண்ணெய்தான்.. வெங்காயம் உரிக்கும்போது, நம்முடைய நமக்கு கண்ணீர் வருவதற்கு காரணமும் இந்த எண்ணெய்தான். உடலிலுள்ள கெட்ட நீரை வெளியேற்றக்கூடியது இந்த சின்ன வெங்காயம்.

ருசிக்காக மட்டுமல்லாமல், உடல் உபாதைகளுக்கும் இந்த சின்ன வெங்காயத்தை மருந்தாக பயன்படுத்தலாம்.. காலை, மதியம், மாலை, இரவு என்று 4 வேளைக்கு அரை ஸ்பூன் சின்ன வெங்காய சாறு சாப்பிட்டு வந்தால், நம்முடைய நுரையீரல் பலப்படுமாம்.. நுரையீரலில் தங்கியிருக்கும் அழுக்குகள், கழிவுகள், நச்சுக்கள் வெளியேறிவிடும்.

சுவாச கோளாறுகள்: ஜலதோஷம், இருமல், காய்ச்சல், நெஞ்சுசளி வந்தாலும், வெங்காய சாறுடன் சம அளவு தேன் கலந்து சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கிறது.. இதயத்துக்கு மிகவும் நன்மை தரக்கூடியது சின்ன வெங்காயம்.. நெஞ்சுவலி பிரச்சினை இருப்பவர்கள் தினமும் வெங்காயத்தைப் பச்சையாக சாப்பிட்டு வந்தால் இதயம் பலம் பெறும்.. ரத்தம் உறையும் பிரச்சினையும் சீராகும்.

உடல் எடை குறைய வேண்டுமானாலும், சின்ன வெங்காயத்தை பச்சையாக சாப்பிட்டாலே நிறைய ஊட்டச்சத்து கிடைக்குமாம்.. காரணம், சின்ன வெங்காய சாறு கொழுப்பை கரைக்கும் தன்மையுடையது.. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தக்கூடியது.. முக்கியமாக, புற்றுநோய் எதிர்ப்பு பண்புகள் சின்ன வெங்காயத்தில் நிறையவே உள்ளன.

ரத்த சோகை: வெங்காயத்தில் வைட்டமின் E நிறைந்துள்ளதால், கண் சம்பந்தப்பட்ட கோளாறுகளை தடுக்கிறது. இரும்பு சத்து அதிகமுள்ள வெங்காயம், ரத்த சோகையை குணமாக்குகிறது.. மலச்சிக்கல் இருப்பவர்களும், வெங்காயத்தை நறுக்கி விளக்கெண்ணெயில் வதக்கி சாப்பிட்டால் நிவாரணம் கிடைக்கும். உடலில் பித்தம் அதிகமாக சேர்ந்துவிட்டால், 4 சின்ன வெங்காயத்தை தோலுரித்து, சிறிது வெல்லத்தைச் சேர்த்து அரைத்து சாப்பிட்டால், பித்தம் நீங்கும்.

வாய் சுகாதாரம்: பல் வலி இருந்தாலும்,



வெங்காயத்தை ஒரு துண்டு எடுத்து பல்வலி உள்ள இடத்தில் வைத்தால் உடனே வலி குறையும்.. சொத்தைப் பல் உள்ள இடத்தில் வைத்தாலும், அந்த பல்லுக்குள் இருக்கும் புழுக்கள் வெளியேறிவிடும்... பாக்டீரியாக்கள், தொற்றுக்களும் அழிந்துவிடும்... சின்ன வெங்காயத்துடன், 2 புதினா இலைகளையும் சேர்த்து வாயில் போட்டு மென்று விழுங்கினால் இன்னும் நன்மை கிடைக்கும். வெங்காய நாற்றமும் வராது.. வாய்ப்புண் குணமாகும்.

மூல நோயால் அவதிப்படுபவர்களுக்கு சின்ன வெங்காய சாறு பெரிதும் கை கொடுக்கிறதாம். அதாவது, 50 கிராம் வெங்காய சாற்றில் சிறிது தண்ணீர் சேர்த்து 15 நாட்களுக்கு குடித்து வந்தால் ரத்த மூலம் கட்டுக்குள் வருமாம். அல்லது வெங்காயத்தை துண்டுகளாக்கி, சிறிது இலவம் பிசின், சிறிது கற்கண்டு தூள் சேர்த்து பாலுடன் சேர்த்து சாப்பிட்டால் மூலக்கோளாறுகளும் நீங்குகிறதாம்.

வெங்காயம்: வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்பு தளர்ச்சி சீராகும்.. வெங்காயத்தில் இன்சுலின் நிறைய உள்ளதால் சர்க்கரை நோயாளிகள் இதை தாராளமாகவே பயன்படுத்தலாம். ஆண்களுக்கு வரப்பிரசாதம்தான் இந்த சின்ன வெங்காயம்.. குறிப்பாக, விறைப்பு தன்மை பிரச்னையால் பாதிக்கப்பட்டிருந்தால், வெங்காயத்தை அப்படியே பச்சையாக சாப்பிடுவது நல்லதாம்.. காரணம், டெஸ்டோஸ்டிரோனின் அளவை அதிகரிக்க செய்வதாக ஆய்வுகள் கூறுகின்றன.

அதேபோல, வெங்காயத்தை வதக்கி தேன் விட்டு இரவில் சாப்பிட்டு, பின் பசும் பால் சாப்பிட்டாலும் ஆண்களுக்கு நன்மை பயக்குவதாக சொல்கிறார்கள்.
2 சின்ன வெங்காயத்தை இடித்து, அரை டம்ளர் தண்ணீரில் கலந்து குடித்துவந்தால் இதற்கு பலன் கிடைக்க வாய்ப்புள்ளது.

டாக்டர் ஆலோசனை: ஆனால், சின்னவெங்காயத்தை இப்படியெல்லாம் மருந்தாக எடுக்கும்போது, மருத்துவர்களின் ஆலோசனையை கட்டாயம் பெற்றே சாப்பிட வேண்டும்.

வெங்காயத்தில் வைட்டமின் A, C, K நிரம்பி யுள்ளதால் நம்முடைய சருமத்துக்கு போதுமான பாதுகாப்பை தருகின்றன.. புற ஊதா கதிர்களிலிருந்தும் பாதுகாக்கின்றன. அதனால்தான், முகத்தில் ஃபேஸ்பேக் போல வெங்காய சாற்றினை பயன்படுத்துவார்கள்.. ஆனால், முகப்பரு, காயங்கள், சிறு கட்டிகள் ஏதாவது இருந்தால், இந்த வெங்காய சாறு பூசக்கூடாது. ஆனால், நறுக்கிய வெங்காயத்தை முகப்பரு உள்ள இடத்தில் தேய்த்தால் முகப்பரு நீங்கும்.

கட்டிகள்: சருமத்தில், கட்டிகள் இருந்தாலும், இந்த சின்ன வெங்காயம் உதவுகிறது.. வெங்காயத்தை சுட்டு, சிறிது மஞ்சள், நெய் கலந்து இளஞ்சூட்டுடன் கட்டிகள் மீது வைத்து காட்டினால், நாளடைவில் கட்டிகள் பழுத்து உடையுமாம்.

அவ்வளவு ஏன்? அந்த காலத்தில் பாம்பு கடித்துவிட்டாலும் வெங்காயத்தையே மென்று தின்ன தருவார்களாம். இதனால் உடனே விஷம் இறங்குமாம்.. தேள்கொட்டிய இடத்தில், வெங்காயத்தை நசுக்கி தேய்த்தாலும், விஷம் இறங்கும் என்பார்கள்.

தலைமுடி: தலைவலி தீரவேண்டுமானால் அதற்கும் வெங்காயத்தை அரைத்து பற்று போடுவார்கள்.. தலைமுடி வளர்ச்சிக்கும் வெங்காயம் உதவுகிறது. தேங்காய் எண்ணெய் காய்ச்சும்போது, வெங்காய விழுதையும் கொட்டி காய்ச்சி வடிகட்டி பயன்படுத்தலாம்.. சின்ன வெங்காயத்தில் உள்ள சல்ஃபர் என்ற வேதிப்பொருள் இருப்பதால், தலைமுடி வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகிறது. சின்ன வெங்காயச் சாற்றை தலையில் 5 நிமிடம் மசாஜ் செய்வதனால் ரத்த ஓட்டமும் அதிகரிக்கிறது.




கும்பகோணம், "கோவில்களின் நகரம்" என்று அழைக்கப்படும் ஒரு புனிதத் தலம்.

இங்கு சிவபெருமான் மற்றும் பெருமாளுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பல பிரசித்தி பெற்ற, பழமையான கோவில்கள் உள்ளன. ஆதிகும்பேஸ்வரர், நாகேஸ்வரன் ஆகிய சிவத்தலங்களும், சாரங்கபாணி, சக்கரபாணி போன்ற பெருமாள் தலங்களும் முக்கியமானவை.

### கும்பகோணத்தில் உள்ள முக்கிய சிவன் கோயில்கள்

ஆதி கும்பேஸ்வரர் கோவில்: கும்பகோணத்தின் முதன்மைக் கோவில், ஆதிகும்பேஸ்வரர் (சுயம்பு).

நாகேஸ்வரன் கோவில் (குடந்தைக் கீழ்க்கோட்டம்): தேவாரப் பாடல் பெற்ற தலம், சூரியன் வழிபட்ட தலம்.

காசி விஸ்வநாதர் கோவில்: மகாமகக் குளத்தின் வடகரையில் அமைந்துள்ளது.

அபிமுகேஸ்வரர் கோயில்: மகாமகக் குளம் அருகில், சிவபெருமானுக்கு அர்ப்பணிக்கப்பட்டது.

கம்பட்ட விஸ்வநாதர் கோயில்: கும்பகோணத்தின் பழமையான சிவன் கோவில்களில் ஒன்று.

ஏகாம்பரேஸ்வரர் கோயில்: கும்பகோணத்தில் உள்ள மற்றொரு முக்கிய சிவாலயம்.

காளஹஸ்தீஸ்வரர் கோயில்: வரலாற்றுச் சிறப்புமிக்க சிவன் கோவில்.

கௌதமேஸ்வரர் கோயில்: பிரசித்தி பெற்ற சிவத்தலம்.

### கும்பகோணத்தில் உள்ள பெருமாள் கோயில்கள்

சாரங்கபாணி சுவாமி கோயில்: 108 திவ்ய தேசங்களில் 12–வது, ஆழ்வார்களால் பாடப்பெற்ற தலம்.

சக்கரபாணி சுவாமி கோயில்: சக்கர ரூபமாக பெருமாள் அருளும் தனித்துவமான தலம்.

வேதநாராயணப் பெருமாள் கோயில்: திருமால் வேதங்கள் மூலம் வழிபட்ட தலம்.

ராமசுவாமி கோயில்: ராமாயணக் காட்சிகள் செதுக்கப்பட்ட நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட கோவில்.

ராஜகோபாலசுவாமி கோயில்: கும்பகோணத்தின் மையப்பகுதியில் உள்ள பெருமாள் தலம்.

சிவன் கோவில்கள் பெரும்பாலானவை மகாமக குளத்தைச் சுற்றியும், பெருமாள் கோவில்கள் நகரின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ளன.

இங்கிருக்கும் கோவில்கள் கட்டிடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.





## கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல் பணியில் இருந்து

# பணி ஓய்வில் செல்ல உள்ளவர்களுடன் கலந்துரையாடி அவர்களை பாராட்டிய SP டாக்டர்.R.ஸ்டாலின் IPS அவர்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் காவல் பணியில் தங்கள் ஈடுபாடும், ஒழுக்கமும் எதிர்கால காவல் அதிகாரிகளுக்கு ஒரு சிறந்த முன்மாதிரியாக அமையும். பணி ஓய்வில் செல்ல இருக்கும் போலீஸாரை வாழ்த்தி பாராட்டிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள். காவல்துறையில் பணிபுரிந்து இந்த மாதம் ஓய்வில் செல்லவிருக்கும் 6 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மற்றும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் 30.3.2026–அன்று மாவட்ட காவல் அலுவலகத்தில் SP டாக்டர்.R. ஸ்டாலின் IPS அவர்கள் கலந்துரையாடினார்.

அதன்படி பணியில் சிறப்பாக செயல்பட்டு தங்களது பணியை நிறைவு செய்யும் அனைவரையும் பாராட்டி சான்றிதழ் மற்றும் வாழ்த்து மடல்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்கள் வழங்கி கவுரவித்தார்.

தலைமை நிருபர்: J.ஜெயவேல் முருகன், கன்னியாகுமரி.






செய்திகள் மற்றும் விளம்பரங்கள் அனுப்ப:

editorpoliceparvai@gmail.com

செயல் அலுவலகம்: 14, 2-வது மாடி, எண்.4, MRG காம்ப்ளக்ஸ், போலீஸ் ஸ்டேஷன் அருகில், மெயின்ரோடு, எடமலைப்பட்டிபுதூர், திருச்சி - 620 012. 9789491438



# ஆன்லைன் பேமெண்ட் மாற்றங்கள்

## இனி உங்கள் வங்கி கணக்கை அத்தனை எளிதாக கையாள முடியாது; அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியவை...

ஏப்ரல் 1, 2026 முதல் ஆன்லைன் பேமெண்ட் செய்யும் முறை, OTP பயன்படுத்தும் முறை மற்றும் உங்கள் வங்கிச் கணக்கைப் பாதுகாப்பாக வைக்கும் முறை என அனைத்தும் முற்றிலும் மாறிவிட்டன.

**முதல் விதி - டைனமிக் டூ-ஃபேக்டர் அங்கீகாரம் (Dynamic Two-Factor Authentication)**

இனி ஒவ்வொரு பணப்பரிவர்த்தனையும் எங்கிருந்து செய்யப்படுகிறது என்பது தீவிரமாகச் சரிபார்க்கப்படும்.

**இரண்டாவது விதி - ஸ்கிரீன்ஷாட் மற்றும் ஸ்கிரீன் ரெக்கார்டிங் தடை**

வங்கிச் செயலிகளில் (Banking Apps) ஸ்கிரீன்ஷாட் எடுப்பது அல்லது ஸ்கிரீன் ரெக்கார்டிங் செய்வது முற்றிலும் தடை செய்யப்படும். ஸ்கேமர்கள் 'AnyDesk' போன்ற செயலிகள் மூலம் உங்கள் திரையைப் பார்த்து, உங்கள் OTP மற்றும் கடவுச்சொற்களைத் திருடுவதைத் தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மூன்றாவது விதி - இரவு நேரப் பரிவர்த்தனை லாக் (Night-time Transaction Lock)**

வங்கிச் செயலிகளில் இரவு 11 மணி முதல் காலை 6 மணி வரை பணப் பரிவர்த்தனைகளை லாக் செய்து கொள்ளும் வசதி அறிமுகப் படுத்தப்படுகிறது. இந்த நேரத்தில் உங்கள் கணக்கிலிருந்து ஒரு ரூபாய் கூட யாராலும் எடுக்க முடியாது.

**நான்காவது விதி - மால்வேர் எச்சரிக்கை**

உங்கள் மொபைலில் ஏதேனும் மோசடி செயலிகளையோ அல்லது மால்வேர்களையோ (Malware) தரவிறக்கம் செய்தால், உடனடியாக உங்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்படும்.

**ஐந்தாவது விதி - OTP முறையில் மாற்றம்**

எஸ்எம்எஸ் (SMS) மூலம் வரும் OTP முறை தடை செய்யப்பட உள்ளது. இனி நீங்கள் பயன்படுத்தும் வங்கிச் செயலியிலேயே (App) நேரடியாக OTP வரும்.

**ஆறாவது விதி - கூடுதல் பாதுகாப்பு கேள்விகள்**

வழக்கத்திற்கு மாறாக உங்கள் கணக்கிலிருந்து அதிகத் தொகை (உதாரணத்திற்கு ரூ.50,000 அல்லது ரூ.1,00,000 மேல்) எடுக்கப்பட்டால், கூடுதல் பாதுகாப்பு கேள்விகள் கேட்கப்படும். உங்கள் தாயார் பெயர் அல்லது பள்ளி போன்ற நீங்கள் ஏற்கனவே பதிவு செய்த கேள்விகளுக்குச் சரியான பதிலளித்தால் மட்டுமே பரிவர்த்தனை அனுமதிக்கப்படும்.

**ஏழாவது விதி - நடத்தை பயோமெட்ரிக்ஸ் (Behavioral Biometrics)**

நீங்கள் மொபைலைத் தொடும் விதம், டைப் செய்யும் வேகம் மற்றும் திரையைக் கையாளும் முறை ஆகியவற்றை வைத்து, அந்தச் செயலியை இயக்குவது நீங்கள்தானா என்பதை வங்கிச் செயலி உறுதிப்படுத்தும்.

**எட்டாவது விதி - ஆதார் மற்றும் பயோமெட்ரிக்**

ரூ.5 லட்சம் அல்லது ரூ.10 லட்சம் போன்ற பெரிய தொகையைப் பரிவர்த்தனை செய்யும் போது, ஆதார் இணைப்புடன் கூடிய கைரேகை அல்லது முக அங்கீகாரம் (Face Scan) கேட்கப்படும். இவை இல்லாமல் பணத்தை அனுப்ப முடியாது.

**தகவல்: குரு.சரவணன், திண்டுக்கல்**




சட்டமன்ற பொதுத்தேர்தல் – 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் திரு.க.தர்ப்பகராஜ் IAS அவர்கள் கடந்த 19.03.2026 அன்று திருவண்ணாமலை மாநகராட்சி அலுவலகத்தில் வாக்காளர்கள் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு பிரச்சார பேரணியை தொடங்கி வைத்தார்.

சிறப்பு நிருபர்: இரா.சக்திவேல், வேட்டவலம்.

---

# தென்காசி 'SP அலுவலகத்தில் வேலை' என போலியான செய்தியை பரப்பி பண மோசடி

## ஆசை வார்த்தை கூறி மோசடியில் ஈடுபட்ட நபர் கைது

சமீபத்தில் தென்காசி வட்டார பகுதிகளில் உள்ள வாட்ஸ்–அப் குழுவில் "தென்காசி மாவட்ட காவல் அலுவலகத்தில் தட்டச்சு பணிக்கு பெண்கள் மட்டும் உடனடி தேவை, தகவலுக்கு செல்போன் எண்ணில் அணுகவும்" என்று செய்தி பரவுவதாக போலீஸாருக்கு தெரிய வந்தது.

இந்த போலியான செய்தி குறித்து கிடைத்த கிடைத்த தகவலின் பேரில் தென்காசி மாவட்ட SP திரு.A.மயில்வாகனன் IPS அவர்கள் உத்தரவின் பேரில் சைபர் கிரைம் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஜீலியஸ் சீசர் அவர்களின் தலைமையில், காவல் ஆய்வாளர் திருமதி.வசந்தி மற்றும் சைபர் குற்றப்பிரிவு காவலர்கள் விசாரணை மேற்கொண்டனர்.



நிரந்தர வேலை வாய்ப்பு தருவதாக ஆசை வார்த்தை கூறி மோசடியில் ஈடுபட்ட கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தாலுகா, ஐயர்பாடியை சேர்ந்த லாசர் என்பவரின் மகன் சார்லஸ் விஜயகுமார் (31) என்பவரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இணையதளத்திலும், வாட்ஸ் ஆப் குழுவிலும் இதுபோன்ற பரவி வரும் போலி வேலைவாய்ப்பு செய்திகளை நம்பி பொது மக்கள் பணத்தை இழந்து விட வேண்டாம் எனவும் இதுபோன்ற வேலைவாய்ப்பு மோசடி குறித்து உடனடியாக தெரிவிக்கும்படியும் காவல் துறையினர் கேட்டுக் கொண்டனர்.

நிருபர்: P.அண்ணாமலை, தென்காசி.






# ஒரு விரல்..
# ஒரு வாக்கு..
# ஒரு மாற்றம்!

அரியலூர் மாவட்ட விளையாட்டு அரங்கில், 2026 தேர்தலை முன்னிட்டு அங்கன்வாடி பணியாளர்கள் ஒன்றிணைந்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி. இ.ஆ.ப.. அவர்கள் தலைமையில் தேர்தல் மையிடப்பட்ட விரல் வடிவில் நின்று வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. விஸ்வேஷ் பாலசுப்ரமணியம் சாஸ்திரி, IPS அவர்கள் மற்றும் பலர் உள்ளனர்.

நிருபர்: தங்க.பாண்டியன், அரியலூர்.






# வழிப்பறியில் ஈடுபட்ட 5 இளைஞர்களை கைது செய்த சிவகங்கை தாலுகா காவல் நிலைய போலீஸார்

சிவகங்கை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட விஜயமாணிக்கம் கிராமத்தைச் சேர்ந்த ராமதாஸ் என்பவரின் மகன் மோகன்துரை களஞ்சியம் (25). அவரது செல்போன் எண்ணுக்கு மார்ச் 23–ம் தேதி Grinder App மூலம் தொடர்பு கொண்ட நபர்கள் சிலர் கொசவ நடப்பு கண்மாய் பகுதிக்கு வரச் சொல்லியுள்ளனர்.

அதன்பேரில், களஞ்சியம் அங்கு சென்றபோது, 3 இருசக்கர வாகனங்களுடன் 5 நபர்கள் இருந்துள்ளனர். அவர்கள் களஞ்சியத்தின் செல்போனை வாங்கி, அதில் உள்ள ஜி பே–வின் ரகசிய எண்ணையும் வாங்கிக் கொண்டதுடன், அவரை கம்பு, கத்தியால் தாக்கியுள்ளனர்.

மேலும், களஞ்சியத்தின் காதில் அணிந்திருந்த 1.5 கிராம் தங்கத்தோடு, ரூ.1,500 ரொக்கம் ஆகியவற்றை பறித்துக் கொண்டு அங்கிருந்து தப்பியோடி விட்டனர்.

காயமடைந்த களஞ்சியம் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இதுதொடர்பாக, சிவகங்கை தாலுகா காவல் நிலைய போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டதில், சிவகங்கை மாவட்டம் மலம்பட்டியைச் சேர்ந்த அம்பலம் மகன் லட்சுமணன், ராமலிங்கம் மகன் ஆதி, ஒக்கூர் முகாமைச் சேர்ந்த சோனை முத்து மகன் அர்ஜுனன், முத்துநகரைச் சேர்ந்த லட்சுமணன் மகன் சிவா, குமாரப்பட்டியைச் சேர்ந்த தமிழ் பாண்டி மகன் ரித்திக் என்கிற கலை ஆகியோரை கைது செய்து, விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

நிருபர்: சிவ.குருநாதன்.




## திருவண்ணாமலையில் 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு நிகழ்ச்சி

சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெற உள்ளதை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ் IAS அவர்கள் 1.4.2026 ஆரணி வட்டம் ஆகாரம் எஸ்.எஸ்.எஸ் மகளிர் கல்லூரியில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் நோக்கத்தில் கல்லூரி மாணவிகளுக்கு வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்.

சிறப்பு நிருபர்: இரா.சக்திவேல், வேட்டவலம்.

# குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கான
# இழப்பீடு திட்டம் 357(அ)




ஒரு குற்றத்தை பொறுத்த வரையில் அந்த குற்றத்தால் உடலாலோ, உடைமையாலோ பாதிப்பு மற்றும் இழப்பீடு யாருக்கு ஏற்படுகிறதோ அவரே பாதிக்கப்பட்ட நபர் (victim). அப்படி பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு வழங்கு வதற்கான ஒரு திட்டம் தான் குற்றத்தால் பாதிக்கப்பட்ட வருக்கான இழப்பீடு திட்டம் இந்திய குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு 357 (அ) அதை பற்றிய விளக்கம்.

ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வந்தது அதன் பின்பு 12–ம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் சட்டத்தில் உரிமை யியல் மற்றும் குற்றவியல் தவறுகளுக்கான தீங்கியல் சட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டு வந்தது.

அதன் பின்பு குற்ற விசாரணை முறைச்சட்டம் 1898 மற்றும் 1973 இருந்து 2008 வரை பிரிவு 357–ன் படியும், பின்பு மாலித்து குழுமம் அறிவுரை யின்படி 2009–ம் ஆண்டு 357 ல் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டு 357(அ) இன்று குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு திட்டம் உருவாக்கப்பட்டது.

1. மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் மூலம் குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கான நஷ்டஈடு தொகைக்கான திட்டம் வகுக்கப்படும்.

2. மாநில மாவட்ட சட்டப் பணி குழுவின் மூலம் குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கான நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.

3. குற்றத்தில் குற்றவாளி விடுதலையாகும் பொழுதோ அல்லது குற்ற வழக்கில் இருந்து குற்றவாளி விலகினாலோ பாதிக்கப்பட்ட நபருக்கு நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.

4. ஒரு குற்றத்தை புலன் விசாரணை செய்ய முடியா மல் குற்றவாளியை கண்டுபிடிக்க முடியாத சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட நபருக்கு மாவட்ட சட்டபணி குழு மூலமாக நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.

**நஷ்ட ஈடு தொகை பெற தகுதிகள்**

1. ஒரு குற்றத்தில் பாதிக்கப்பட்ட நபர் உதாரணமாக குற்றவாளியால் தாக்கப்பட்டு உடலுக்கு ஏற்படும் சாதாரண காயம் முதல் கொடுங்காயம் வரை, கற்பழிப்பு, மரணம் பாதிப்புக்கு ஏற்றவாறு.

2. ஒரு குற்றத்தின் போது குற்றவாளியால் ஏற்படும் சேதம், திருட்டு ஆகியவற்றை இழந்து இருக்கக்கூடிய நபர்.

ஒரு குற்றத்தின் விசாரணை அடிப்படையில் குற்றவாளி தண்டிக்கப்படுகின்ற பொழுது அதனுடன் சேர்த்து அபராதமாக விதித்து அந்த அபராத தொகையை நஷ்ட ஈடாக வழங்கலாம். மேலும் தீர்ப்பின் போது நீதிபதி பாதிக்கப் பட்டவருக்கான இழப்பீடு மற்றும் நஷ்டத்தை கருத்தில் கொண்டு மாவட்ட சட்டப்பணிகள் குழுவிற்கு பரிந்துரை செய்வதின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் ஒரு குற்றத்தால் உயிரை இழந்தவருக்கு மேற்கண்ட வழிகளில் அவருடைய சட்டப்படி வாரிசுகளுக்கு நஷ்ட ஈடு தொகை வழங்கப்படும்.

ஒரு குற்றம் விசாரனை நடைபெறும் காலகட்டத்தில் அந்த நீதிமன்றம் பாதிக்கப்பட்டவரின் சூழ்நிலையை கருத்தில் கொண்டு இடைக்கால நஷ்ட ஈடு தொகையை வழங்கலாம். பின்னர் வழக்கின் முடிவில் தீர்ப்பின் அடிப்படையில், நஷ்ட ஈடு தொகை, குற்றவாளிக்கு விதிக்கப்படும் அபராதம், பாதிக்கப்பட்டவருக்கு போது மானதாக இருந்தால் அந்த தொகையை மேல்முறையீடு செய்யும் காலகட்டத்திற்குள் வழங்க உத்தரவிடலாம்.

அதே போல் குற்றவாளி கண்டுபிடிக்கபடாமல் இருக்கக் கூடிய வழக்குகளில் பாதிக்கப்பட்ட நபர் குற்றம் நடந்ததில் இருந்து மூன்று வருட காலத்திற்குள் நஷ்ட ஈடு மாநில, மாவட்ட சட்டப்பணியின் மூலம் நஷ்ட ஈடு தொகை கேட்டு பெறலாம்.

குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் வெவ்வேறு மாநிலங்களில் நஷ்ட ஈடு தொகை பாதிக்கப்பட்டவருக்கு ஏற்படும் இழப்பு களை பொறுத்து நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் ஒரு குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபர் இந்த சட்டத்தின் அடிப்படையில் நஷ்ட ஈடு கோரி நலம் பெற அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

வழக்கறிஞர்: **K.T.சிவக்குமார்**B.A.,B.L.,
Cell : 8946042012.

Owned and Published by N.Balakrishnan from 4B, GD.Floor, 4th Block, Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar Kolathur, Chennai-600 099. and Printed him at.Meeraoffset printers
No.104, V.R.Pillai Street, Triplicane, Chennai-600 005. Editor: **N.BALAKRISHNAN**




# வாழ்க நீ எம்மான்..!



நமது 'போலீஸ் பார்வை' திருச்சி நிருபர் K.ஜானகி அவர்கள் தேசிய அளவிலான
அத்லடிக் போட்டியில் குண்டெறிதல், தட்டு வீசுதல், ஈட்டி எறிதல் ஆகிய போட்டிகளில்
தங்க பதக்கம் வென்று சாதனை புரிந்துள்ளார். கடந்த ஏப்.5–ம் தேதி தான் வென்ற பதக்கங்களுடன் திருச்சி 'போலீஸ் பார்வை' அலுவலகம் வந்தார். அப்போது, அவரை மென்மேலும் வளர வேண்டும் என பிரார்த்தித்து வாழ்த்தினேன். சமீபத்தில் சென்னையில் நடைபெற்ற 'போலீஸ் பார்வை'
10–ம் ஆண்டு விழாவின்போது, K. ஜானகி அவர்களுக்கு நினைவு பரிசு வழங்கி வாழ்த்து தெரிவித்தேன். நமது குழுமத்தைச் சேர்ந்தவர் தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று சாதனை படைத்தது நமக்கும் பெருமையை தருகிறது. வாழ்க வளத்துடன்..

- ஆசிரியர் டாக்டர் N.பாலகிருஷ்ணன்

Posted at - patrikachannel Egmore Date of publication Everymonth 1st week.
POLICE PARVAI TAMIL MONTHLY R.Dis.No.1132/2015 RNI. TNTAM/2015/66520


# அரவணைக்கும் அரண்மனை அறக்கட்டளை

அறமும் அன்பும் இரு கண்கள்

**ஆதரவற்ற குழந்தைகள், முதியோர்களுக்கு முற்றிலும் இலவச சேவை**

எண்.30/2, சஹாய மாதா கோவில் தெரு, மலையடிவாரம், பொன்மலை,
திருச்சி – 620004 ✆ 98948 90808




**AEROSKATOBALL ASSOCIATION OF TAMILNADU**
Affiliated to :
**AEROSKATOBALL FEDERATION OF INDIA**

No.30/2, Shagayamatha Kovil Street,
Malaiadivaram, Ponmalai, Trichy-4

FIT INDIA

Email : aeroskatoballtrichy@gmail.com
Cell : 9943805636, 9003096846


4B, GD. Floor, 4th Block Adilti Paradise,
No.1, 2nd North Street, Poombuhar Nagar,
Kolathur, Chennai - 600 099.
Cell: 97 89 49 14 38, 766 755 1542

TO